# உதயன்

விலை ரூபா 6-00

13 சுடர்வள்ளுவர் ஆண்டு 2029 ஆனி 28 ஞாயிற்றுக்கிழமை (12-07-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 193


## ஆயிரம் அகதிகள் நாளை மறுதினம் காங்கேசன் அழைத்துவரப்படுவர்

### நேற்றும் உண்ணாவிரதப் போராட்டம்

திருகோணமலை, ஜூலை 12

யாழ்ப்பாணம் செல்வதற்காக திருமலை, சண்ணாடித் தொழிற்சாலையில் தங்கியுள்ள அகதிகளில் ஆயிரம் பேர் நாளை மறுதினம் லங்கா முடித கப்பலில் காங்கேசன்துறை அழைத்து வரப்படுகின்றனர்.

தற்போது காங்கேசன் துறையில் தரித்து நிற்கும் லங்காமுடித கப்பல் நாளை மறுதினம் திருமலை சென்று அகதிகளை யாழ். அழைத்து வர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அகதிகளுக்குக் கப்பலில் செல்வதற்கான 'ரோக்கன்' நேற்று வழங்கப்பட்டன.

இந்த அகதிகளை நேற்று யாழ்ப்பாணம் அனுப்பி வைப்பதற்கு முன்னர் ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

நேற்று அனுப்பி வைக்கப் படாததை ஆட்சேபித்து அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்த போதே நாளை மறுதினம் 14 ஆம் திகதி அவர்களை அழைத்துச் செல்வதாகக் கொழும்பில் இருந்து 'பக்ஸ்' மூலம் அறிவிக்கப்பட்டு 'ரோக்கன்' களும் வழங்கப் பட்டன.

இதே வேளை — கொரிய நாட்டுக் கப்பல் சேவை அடுத்த வாரம் இடம்பெறுவதற்குரிய சாத்தியக் கூறுகள் எதுவுமில்லை என திருமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. (7-9)

# தமிழர் கைது, துன்புறுத்தல்: விசாரிப்பதற்கு விசேட குழு!

## ஜனாதிபதி நியமித்தார்

கொழும்பு, ஜூலை 12

தமிழ் இளைஞர்கள் — யுவதிகள் கைது செய்யப்படும் போதும் தடுத்துவைக்கப் படும் போதும் துன்புறுத்தப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்காக அமைச்சர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர் களையும உள்ளடக்கிய குழு ஒன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் இளை ...ர்களும் யுவதிகளும் விசா ...ணைகளின் போது கடுமை ...ாகத் துன்புறுத்தப்படுகின் ...ார்கள் என்ற முறைப்பாடு களை அடுத்தே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

பௌத்த சாசன, கலா சார, மதவிவகார அமைச்சர்

(10 ஆம் பக்கம் பார்க்க)



அப்ப கைது செய்வது தொடரப் போகுது எண்டு சொல்லுங்கோ......

## ...முல்லை, கிளிநொச்சி அரச அதிபர்கள் ...நிவாரணவெட்டை கண்டித்து அறிக்கை

வவுனியா, ஜூலை 12

"இலங்கை அரசினால் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள நிவாரண வெட்டானது இடம்பெயர்ந்த மக்களின் தற்போதைய அரைப் பட்டினி நிலையை மேலும் மோசமாக்கும்."

மேற்கண்டவாறு முல்லைத் தீவு, கிளிநொச்சி அரச அதிபர்கள் இணைந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரணவெட்டுக் குறித்து முல்லைத்தீவு அரச அதிபர் இ. தர்மகுலசிங்கம் தனது அறிக்கையில், மூன்றில் இரண்டு பங்கு நிவாரண வெட்டு என மீண்டும் அரசு விடுத்துள்ள அறிவித்தலானது முல்லைத்தீவு மாவட்ட மக்களை வெகுவாகப் பாதித் துள்ளது என்று தெரிவித்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஜனாதிபதி ஆணைக்குழு

## 95க்குப் பின் காணாமற் போனோர் குறித்தும் விசாரிக்க வேண்டும்

### ஜனாதிபதியிடம் ஜோசெப் எம்.பி. கோரிக்கை

மட்டக்களப்பு. ஜூலை 12

"காணாமற் போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற் கொள்வதற்காக தங்களால் நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக் குழுவின் காலவரையறை எல்லையை அதிகரித்து 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னரும் காணாமற் போனோர் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இவ்வாறு மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக் கப்பட்டிருப்பதாவது.

தங்களால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் எல்லாம் 94க்கு முன்னைய காலங்களில் காணாமற் போனோர் தொடர்பாகவே விசாரணைகளை மேற்கொண்டுவந்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## குடத்தனையில் தேடுதல்

கொழும்பு, ஜூலை 12

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் நேற்று படையினரால் பெரும் எடுப்பில் தேடுதல் நடத்தப்பட்டதெனவும்—

தேடுதலின் போது கைக்குண்டுகள், கிளைமோர் கண்ணிவெடிகள், துப்பாக்கி ரவைகள் ஆகியவற்றை படையினர் கண்டெடுத்தனர் எனவும்— பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று தெரிவித்தது. (இ-7)

## மிருசுவில்பகுதியில்ஆயுதம் கைப்பற்றியதாக அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 12

மிருசுவில் பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய படையினர் விடுதலைப் புலிகளுக்குச் சொந்தமான ஆயுதக கிடங்கு ஒன்றைக் கைப்பற்றியுள்ளனர் என்று பலாலி படைத் தலைமையகத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் படையினர் நடத்திய இத் தேடுதலில் ரி-56 ரக துப்பாக்கிகள் — 24, துப்பாக்கி உப இயந்திரங்கள் — 5, 303 ரக துப்பாக்கிகள் — 37, தன்னியக்க துப்பாக்கிகள் ஆறு, சாதா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சினைப்பர் தாக்குதல்

கிளிநொச்சி, ஒலுமடு மற்றும் அம்பலகாமம் பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று விடுதலைப் புலிகளின் நிலைகள் மீது சினைப்பர் தாக்குதல் நடத்தினர் என பாதுகாப்பு தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## டக்ளஸை பார்க்கச்சென்ற நபர் கைதாகி விடுதலை

கொழும்பு, ஜூலை 12

தற்பொழுது கொழும்பு அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வரும் ஈ. பி. டி. பி. அமைப்பின் செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம்பியுமான டக்ளஸ் தேவானந்தாவைப் பார்க்கச் சென்ற சிங்கள இளைஞர் ஒருவர் கைதாகி விடுதலை செய்யப்பட்டுள்ளார்,

இந்த இளைஞர் நேற்று முன்தினம் தேவானந்தாவைப் பார்ப்பதற்காக கொழும்பு அரசினர் ஆஸ்பத்திரிக்குச் சென்றபோது, அங்கு காவலில் நின்ற பொலீஸார் இவர் மீது சந்தேகம் கொண்டு இவரை விசாரித்தனர்.

டக்ளஸ் தேவானந்தாவும் இவரைத் தமக்குத் தெரியாது என்று கூறியதை அடுத்து இவர் கைதானார்.

எனினும் விசாரணை முடிவில் நேற்று இவர் விடுதலையானதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ)

## திருமலையில் மோதல் 4 படையினர் பலி!

திருமலை மாவட்டம் அமைதிவழு என்ற இடத்தில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மோதலில் படையினர் தரப்பில் நால்வர் உயிரிழந்தனர் எனவும்—

ஒரு படை வீரர் காயமடைந்தார் எனவும் — பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் நேற்று அறிவித்தது. (இ-7)

## வடக்கு முஸ்லிம் அமைப்பு கூட்டணியுடன் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 12

வடக்கு வாழ் முஸ்லிம்களுக்கான அமைப்பு கூட்டணித் தலைவர்களுடன் நேற்று கொழும்பில் சந்திப்பு நடத்தியது.

இந்த அமைப்பின் செயலாளர் யூ. ஏ. எஸ். சுபியான், மற்றும் அமைப்பைச் சேர்ந்த எல். லுக்மான், எம். ஆர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வடமத்திய மாகாணத்தில் 248 வேட்பாளர் போட்டி

கொழும்பு, ஜூலை 12

வடமத்திய மாகாணசபைகளுக்கு நடைபெற உள்ள மாகாண சபைத் தேர்தலில் 248 வேட்பாளர்கள் போட்டியிட உள்ளனர்.

இரண்டு "போனஸ்" ஆசனங்கள் உள்ளடங்கலாக 33 உறுப்பினர்கள் மாகாண சபைக்குத் தெரிவு செய்யப் படுவார்கள்.

வடமத்திய மாகாணசபைக் கான வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்வதற்கான காலம் நேற்று நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்துள்ளது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

எமது ஸ்தாபனத்துக்கு வந்தவர்களினால் தவற விடப்பட்ட ஒரு தொகைப் பணம் எங்களால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவற விட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

அருள் விநாயகர்
மோட்டோர்ஸ்
இல. 103, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(57542)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு:
03
—
09
—
1958



உதிர்வு:
12
—
07
—
1996

திருமதி
### நவரட்ணராஜா புஷ்பராணி

இரண்டாண்டு சென்றதம்மா உங்கள் அன்பு முகம் கண்டு
எமது குடும்பப் பாச விளக்கே!
ஆசையுடன் அழைக்க அன்பான மனைவி எங்கே?
பாசமுடன் அழைக்க எங்கள் அன்பான அம்மா எங்கே?
நேசமுடன் அழைக்க எம் அன்பு மகள் தங்கை எங்கே?
நாம் எல்லாம் எங்கே என நினைத்து எங்கு சென்று விட்டாய் அம்மா?

உங்கள் நினைவால் வாடும்
கணவன் - வயறிங்நவம்
அன்புப் பிள்ளைகள்,
தாய், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(57537)

உ
## 45 ஆம் நாள் நெஞ்சகலா நினைவுகள்



அமரர் **சின்னத்துரை சச்சிதானந்தம்**
(மண்டைதீவு 7)

தோற்றம்;
16 - 04 - 1950

மறைவு:
29 - 05 - 1998

அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமாய்
எல்லோர் மனங்களிலும் நிலைத்து நின்ற
எம் தெய்வத்தை நயவஞ்சகமாக அழித்த
கயவர்களின் வஞ்சத்தால் என்றும் மனத்
தாங்கலுடன் வாழ்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

74, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(57541)

## மெய்வல்லுநர் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 12

கரவெட்டி ரலன்ற் முன்பள்ளி மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சைவப் புலவர் சி. நவரத்தினம் தலைமையில் நிறுவன மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் கரவெட்டி பிரதேசச் செயலர் செ. ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ-8)

## சோதிட ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ் சோதிட ஆய்வு ஒன்றியம் நடத்தும் "7 ஆம் பாவமும் திருமணமும்" என்ற தலைப்பிலான சோதிட ஆய்வரங்கு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பிரபல சோதிடர்கள் என். சாம்பசிவம், ஐ. எஸ். சண்முகலிங்கம், எஸ். பத்மநாதன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். சோதிடர் ஐயா சச்சிதானந்தம் தலைமை வகிப்பார்.

(இ-7)


A/L 2000
கலைப் பிரிவு
Eco. Mr. இராஜேஸ்வரன்
Chri. Mrs. மல்லிகா
Log. Mr மகிந்தன்
Drama. Mr. ஜோண்சன்
Hindu Mr. நித்தி
Tamil Mr. அருள்
Geo Mr. பவான்
★ O/L Yr. 10, 9 & 8
SHAMROCK
(சி/4257)

நாகம்ஸ்
சினிமா
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
12 - 07 - 98 மட்டும்
சிறுவர், பெரியோர்
அனைவரும் பார்த்து
ரசிக்கக்கூடிய படம்
TITANIC
காட்சிகள் - 10-30, 2-30
(57538)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
ஞாயிறு, திங்கள்
விஜய் நடித்த
செல்வா
செவ்வாய், புதன்
சிவாஜி நடித்த
பார் மகளே பார்
நேரம்:- 10-30. 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(57502)

ராஜா டாக்கீஸ்
யாழ்ப்பாணம்.
மம்முட்டி - அஞ்சு
கோசி, மஞ்சுளா
விஷ்ணுவரதன் நடித்த
சத்திரிய
வம்சம்
தினசரி
10-30 — 2-00 5-00
(புதிய நேரம்)
(சி/4222)


# மரண அறிவித்தல்கள்

## அருளம்பலம் குகதாசன்

(உரிமையாளர், கொழும்பு ஸ்ரூடியோ)

அருளம்பலம் குகதாசன் (உரிமையாளர், கொழும்பு ஸ்ரூடியோ) அவர்கள் 9. 7 98 அன்று கொழும்பில் அகால மரணமானார்.

இவர் நேசம்மாவின் அன்புக் கணவரும், சோபனா, கவிதா, கண்ணன் ஆகியோரின் அன்புத் தகப்பனுமாவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S. மணி
(விமலா ஸ்ரூடியோ)
K K S றோட்,
கோண்டாவில்.

Colombo Address:
A KUGATHASAN
20/6A DESOYSA PLACE
OFF TEMPLERS ROAD, MOUNTLAVINIA

(55450)

திருமதி
## இராசையா நல்லம்மா

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், தாவடியை நிரந்தர வசிப்பிடமாகவும், தற்போது உரும்பிராய் கிழக்கு சிவன் வீதியை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி இராசையா நல்லம்மா 08 - 07 - 98 அன்று காலமானார்.

இவர் காலஞ் சென்ற ஆறுமுகம் இராசையாவின் அன்பு மனைவியும், சண்முகேஸ்வரலிங்கம் (இந்தியா), பரமேஸ்வரலிங்கம், மகேஸ்வரலிங்கம் (டென்மார்க்), ஞானாம்பிகைதேவி, கணேஸ்வரலிங்கம், சிவஞானேஸ்வரலிங்கம் (கனடா), காலஞ்சென்ற தியாகேஸ்வரலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசலிங்கம், சரஸ்வதி (இந்தியா), சரஸ்வதிதேவி, சறோஜினிதேவி, தனலட்சுமி, லதா (கனடா) ஆகியோரின் மாமியும், மலர்விழி, றாஜினி, சுபாசினி, குமார், அனோஜா, கிரிதரன், இமாவதி, நந்தகோபன், துஷ்யந்தன், துஷாந்தினி, துர்மதா, சுபராம், திவாகர், சுதாகர், கீர்த்திகா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற சின்னத்துரை, காலஞ்சென்ற சரஸ்வதி, காலஞ் சென்ற அருளம்மா, பொன்னுத்துரை, காலஞ் சென்ற கனகம்மா, யோகம்மா, இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பிராய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று காலை 10 மணிக்கு உரும்பிராய் இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ. பரமேஸ்வரலிங்கம் (மகன்)
இயக்குநர், சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்
இ. கணேசலிங்கம் (சின்னமணி)
(மருமகன்)

அம்பிகா ஸ்ரோர்ஸ்,
சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(57522)

## சிவகுரு சிவப்பிரகாசம்

(ஓய்வு பெற்ற அதிபர், புகையிரத நிலையம் கோட்டை)

சிவகுரு சிவப்பிரகாசம் 10 - 7 - 98 இல் லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரவதனாவின் அன்புக் கணவரும், சிவநாதன், வனஜா, கிரிஜா, சிவச்சந்திரன் ஆகியோரின் அன்புத்தந்தையும், விஜயந்தி, ரவீந்திரன், பாலக்குமார், கமிலா ஆகியோரின் மாமனாரும், ஊரெழுவைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி எஸ். சிவகுருவின் அன்பு மகனும், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு. திருமதி ஈ. எஸ். எஸ். அருணாசலத்தின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளைதிங்கட்கிழமை லண்டனில் நடைபெறும் என்பதை சகலருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
டாக்டர் எஸ். செல்வவிநாயகபிரகாசம்
9/1, ஸ்ரேசன் வீதி, பம்பலப்பிட்டி.

11, Monks Wood Garden,
Clay. Hall, Iiifordessex,
U K. I. G5 - ODG.

(சி/4256)

## திருமதி மலர் ஜேம்ஸ்

கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி மலர் ஜேம்ஸ் 4-7-98 இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரெட்டினம் - பொன்னுமணி தம்பதிகளின் அன்புப் புதல்வியும், மரியாம்பிள்ளை ஜேம்ஸின் அன்பு மனைவியும், றமேஸ், நொயிலின், சிறாணி, பவானி, மாலினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பொன்ராசா, யோகம், ஜீவம், செல்வம், ஜோதி, காலஞ்சென்ற ராணி, பவ, றொபேட் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 13-7-98 திங்கட்கிழமை இந்தியாவில் நடைபெறும். இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக கொய்யாத்தோட்டம் கிறிஸ்து அரசர் ஆலயத்தில் திங்கட்கிழமை (13-7-98) காலை 6. 45 மணிக்கு (புதிய நேரம்) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
உறவினர்

31, புதுவீதி 1 ஆம் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

[57535]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வள நிலை, பண்பாட்டுப்பின்னணி
# இரண்டுக்கும் ஏற்ற கல்விப் பயிற்சி தேவை

## 21 ஆம் நூற்றாண்டை வரவேற்க ஆயத்தமாவோம்

இருபத்தோராம் நூற்றாண்டில் நாம் விரைவில் நுழைய இருக்கின்றோம். இன்னும் 17 மாதங்கள் தான் இருக்கின்றன. எனவே இந்தப் புதிய நூற்றாண்டிலே நாம் செயற்படுத்த வேண்டிய திட்டங்களை இப்போதே வரைய வேண்டியுள்ளது. கடந்த நூற்றாண்டில் நடந்த நிகழ்வுகளைச் சீர்தூக்கிப் பார்த்து கடமை செய்ய வேண்டியுள்ளோம்.

சல்விப் புலமையின் துணை கொண்டு செயற்றிட்டங்களைத் திட்டவேண்டியுள்ளது. எதிர்காலத் தலைமுறையின் இனிய வாழ்வுக்கெனக் கனிதரு மரங்களை நாட்டுவது போல காரியம் செய்ய வேண்டிய வேளை நெருங்கிவிட்டது. காலத்தின் வேகமான சுழற்சியை மனதிலே கொண்டு முதலிலே செய்ய வேண்டியதைச் செய்ய முயலும் நேரமிது.

இன்று எமது இளந்தலைமுறையினரின் வாழ்க்கை துன்பம் நிறைந்த பாதையாக உள்ளது. சின்னஞ்சிறிசுகளும் இந்தப் பாதையிலேதான் பயணஞ் செய்ய வேண்டியுள்ளனர். பாதையைச் செப்பனிட வேண்டியது வளர்ந்தோராகிய எமது முதற்கடமையாகும். எமது அறிவையும், அனுபவத்தையும் கொண்டு அவர்களுக்கு ஏற்ற வழி சமைக்க வேண்டியவர்கள் நாங்களே.

காலம் எமக்குக் கற்றுத் தந்த பாடங்களின் துணையால் துன்பத்தை வெல்லப் பழகினோம். இறைவனின் இருப்பை உணர்ந்தோம். அன்பின் ஆற்றலையும் கண்டோம். வாழ்க்கையின் நடைமுறைகளை விளங்கிக் கொண்டோம். எனவே எமது பட்டறிவினால்பெற்ற தெளிவைக் கொண்டு இளையோரை வழிநடத்தப் பணி செய்வோம்.

இன்றைய குழந்தைகளின் கல்வி நிலையிலே சில மாற்றங்கள் தேவை என்பதை உலகிலே அனைவரும் உணர்ந்துள்ளனர். மேலை நாடுகளில் அது பற்றிய ஆய்வுகளும் கருத்தரங்குகளும் நடக்கின்றன. வரப்போகும் இருபத்தோராம் நூற்றாண்டின் கல்வியை அவர்கள் திட்டமிட்டு இப்போதே முன்னோடிச் செயற்பாடுகளையும் தொடங்கி விட்டார்கள்.

நாம் இன்னமும் அவர்களின் திட்டங்களையே எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம். இனிமேல் அதை விடுத்து எமது பண்பாட்டுப் பின்னணிக்கும் இயற்கை வள நிலைக்கும் ஏற்ற கல்விப் பயிற்சியை இளஞ்சிறார் பெற வகைசெய்ய வேண்டும். தொழில் நுட்பத்தின் பெருக்கத்தால், கருவிக் கையாட்சியின் பெருக்கத்தால், கல்வியின் போக்கில் நிறைய மாற்றங்கள் ஏற்பட உள்ளன. ஆனால் அவற்றின் அறிவு மட்டும் மனிதனுக்குப் போதாது. உள்ளத்திலே அமைதியும் மகிழ்வும் வேண்டும். அதனால் அவன் வாழ்க்கையில் துன்பம் தலை நீட்டாது. சலிப்பு ஏற்படாது. தூய்மை இருக்கும். பொய்மை கெடும். வக்கிர புத்தி செயலற்றுப்போகும். வாய்மை நிலைக்கும்.

எனவே இத்தகைய மனித விழுமியங்களைக் கற்றுக் கொடுக்கும் செயல்முறைக் கல்விக்குக் கூடி வாழும்நிலை ஏற்ற பின்னணியாக அமையுமென்பது எமது கருத்து. தொழில்நுட்ப வளர்ச்சிக்கு இயந்திரங்களின் ஒன்றிணைந்த இயக்கம் உதவுவது போல மனித விழுமிய வளர்ச்சிக்கு ஒற்றுமையான செயற்பாடு அவசியம்.

குழந்தை நிலையிலே அதனைப் பயிற்றுவிப்பது நிறைந்த பலன் தரும். மனித இயந்திரங்களை அன்பெனும் மின்சக்தியால் இணைத்துத் தொழிற்படச் செய்வதே மனிதவாழ்வின் நிறைவுக்கு வழி காட்டும். எமது இளஞ்சிறார்களை அன்பு நிலையிலே ஒன்று சேரச்செய்யத் திட்டமிட வேண்டும். குடும்பம் என்ற அமைப்பை இழந்த குழந்தைகளின் எண்ணிக்கை இன்று பெருகிவருகிறது. அவர்களின் நலன் காக்க இந்த ஒன்றிணைந்த கல்விப்பயிற்சிதுணைபுரியும்.

ஒரு கூரையின் கீழ் அன்பு வட்டத்தால், அமைந்த நடைமுறை வாழ்க்கைக்கான பயிற்சியால் அக்குழந்தைகளின் மனம் பண்படும். கடமையில் விருப்பு வளரும், கல்வியில் மனம் பதியும் தன்னம்பிக்கையின் நிழல் அவர்களுக்குத் தெரியும். இதனை இன்று செய்ய நிறைவாழ்வு இல்லங்கள் அவர்களுக்கு இன்றியமையாதன.

எமது பண்பாட்டின் அசைக்க முடியாத அறுக்க முடியாத மூலவேர்களை அவர்கள் அறியச் செய்ய வேண்டும். அவர்கள் வாழும் இல்லத்துக்கு அருகில் ஏனையவற்றைப் புகட்டும் கல்வி நிலையம் அமையுமானால் எமதுபணி விரைவாய் நடக்கும். இருபத்தோராம் நூற்றாண்டை இனிதாய் வரவேற்க இவ்வழியைக் கடைப்பிடிப்போமாக.

★

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# அன்புநிறை அம்மாவே ...!

அன்புநிறைந்த அம்மாவிற்கு,

நலம் விசாரிக்கக் கூட மனமில்லாமல் நீ எழுதியிருந்த குற்றப்பத்திரிகைக் கடிதத்தை வாசித்து மிகுந்த மனக்குறல் அடைந்தேன். அதிற் குறிப்பிட்ட ஒவ்வொரு விடயம் பற்றியும் என்பக்க நியாயங்களை எழுத வேண்டுமானால் தனித்தனி ஒவ்வொரு கடிதம் எழுத வேண்டும். பெற்ற தாயான நீயே இதுவரை என்னைப் புரிந்து கொள்ளாது தவறான கண்ணோட்டத்தைக் கொண்டால் வேறு யாரம்மா என்னைப் புரிந்து கொள்வார்கள்? ஏக்கம் தான் மிஞ்சுகிறது.

என்னைத் திருத்துவதென்ற பெயரில் வீட்டில் என் தன்னம்பிக்கையை தகர்க்கும் வகையில் ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பாய். அப்பா எப்போதும் என்பக்கம் என்று வேறு குற்றம் சாட்டுகிறாய். அப்பா என்பக்க நியாயங்கள் குறித்தும் சிந்திக்கிறார். அம்மா, நீ என்னைத் திருத்த முயலும் போது கையாளும் வார்த்தைகளைப் பற்றிக் கொஞ்சம் ஆறஅமர யோசித்துப் பார். கடிதத்திலும் கூட, ''கலியாணச் சந்தையிலே விலை போக வேண்டியவள்'' எனக்குறிப்பிட்டிருந்தாய். நானென்ன கத்தரிக்காயா? மாங்காயா சந்தையில் விலைப் பொருளாவதற்கு?

> **மடல் மோதல்**
>
> அம்மாவுக்கும் மகளுக்கும் இடையில் நடைபெற்று வரும் மடல் மோதலில் மகள் சார்பில் வெளிவரும் இரண்டாவது பதில் மடல் இதுவாகும். இந்த மடல் சற்று நீண்டிருப்பதால் இரண்டு பகுதிகளாகப் பிரசுரிக்கிறோம். இரண்டாவது பகுதி அடுத்த வாரம் வெளியிடப்படும்.
>
> இந்த மடலை வரைந்தவர் யாழ். பல்கலைக்கழக உத்தியோகத்தரான
>
> நா. விமலாம்பிகை

உலகவரலாறு முழுவதும் ஒரு வியாபாரப் பொருளாக விற்றுத் தீர்த்து விடக்கூடிய பண்டமாகத்தானே பெண் கருதப்படுகிறாள். போர்க்களத்தில் தூக்கிச் செல்லப்பட்டிருக்கிறாள்; பரிசுப் பொருளாக வழங்கப்பட்டிருக்கிறாள்; சூதுப் பொருளாகியிருக்கிறாள்; கலை இலக்கியங்களில் சந்தைக்கான அழகுப் பொருளாகப் பயன்பட்டிருக்கிறாள். இந்த ஆண் மையப்பட்ட உடைமை உணர்வின் வழிவந்த கருத்தியலின் பின்னணியில் நின்று நீயும் இப்படிப் பேசும்போது சிந்திக்கத் தலைப்பட்ட நான் விளக்க வார்த்தைகள் இன்றித் தவிக்கிறேன்.

கடைசியில் ''பொம்பிளையள் தானே எங்களுக்கு[illegible] இருக்கினம். சித்[illegible]'' என ஞாபகப் படுத்தி இருந்தாய். பெண்கள் உண்பதற்கு வாயோடு மட்டும் பிறக்கவில்லையம்மா. உழைப்பதற்கு இரண்டு கைகளையும், பகுத்தறிந்து சிந்திக்கும் மூளையோடும் தான் பிறந்திருக்கின்றார்கள். அவர்களைத் தன்னம்பிக்கையோடும் துணிச்சலோடும் அறிவாற்றலூட்டி வளர்த்தால் உலகின் எட்ட முடியாத இமயங்களையெல்லாம் தொட்டுத் திரும்புவார்கள். முதலில் பெண்களைச் சுமையென்று நினைக்கும் உன் பழங்காலச் சித்தாந்தத்தைக் கைவிடு. உன் பாரம்பரியம் கற்றுத்தந்த வார்த்தைகளின் கோணல்களை எப்படி விளக்குவது? அவற்றை எப்படித் தொலைப்பது?

இப்போது அப்பாவும் நடுவில் இல்லை. என் எண்ணங்களை விளக்க இக் கடிதத்தை நல்லதொரு வாய்ப்பாகக் கொள்கிறேன். நான் அறை எடுத்து இருப்பது சிநேகிதிகளுடன் கும்மாளம் போட அல்ல, ஆங்கிலம் படிக்கத்தான். பள்ளிக் கூடத்திலும், பல்கலைக் கழகத்திலும் நான் கற்ற ஆங்கிலம் ஓர் உயர் தொழிலில் என்னை நிலை நிறுத்திக் கொள்ளப் போதுமானதல்ல. அடுத்த வருடம் எனக்கு வேலை கிடைத்துவிடும். அதன்பின் படிக்க நேரம் கிடைக்காது. அதனால்தான் இந்த அருமையான காலத்தைப் பயனுள்ள வழியில் பயன்படுத்தத் தீர்மானித்தேன்.

தொழில் நுட்பக் கல்லூரியில் பகல் வகுப்பிலும் தனிப்பட்ட ஆசிரியர் ஒருவரிடமும் விடாமுயற்சியுடன் ஆங்கிலம் படித்து வருகிறேன். அடிக்கடி வீட்டிற்கு நான் வந்தபோகக் கூடிய சூழ்நிலை பாதைகளில் எந்தளவிற்கு இருக்கிறது என்பது உனக்கே தெரியும் தானே. 'பொம்பிளை பிள்ளை கனக்கப் படிக்கத் தேவையில்லை படிச்சது காணும்' என்பது உம் சித்தாந்தமாயிருக்கலாம். உத்தியோகத்துக்காக மட்டுமல்ல என்னில் நான் வளர, என்னுள் முகிழ்க்கும் ஆற்றல்கள் சமுதாயத்திற்கு என் பங்களிப்பாகப் பயன்பட, இன்னும் படிக்கவும் சிந்திக்கவும் ஆசைப்படுகிறேன்.

என் சுய அடையாளங்கள் அனைத்தையும் தொலைத்துவிடக் கூடிய கல்யாணம் ஒன்றைச் செய்ய என்னால் முடியாது. சந்தையில் தென்னாலிராமன் பூனைவிற்றது போல தேவையற்ற பண்டமாய் பொன் பொருளோடு விலைப்படும் ஒருத்தியாகி, தனக்குத் தானே விலைபேசி விற்கிற ஒருவரை நானும் ஏற்றுக் கொண்டால் என் கல்வியினால் நான் சுயசிந்தனையை எட்டவில்லை என்பது தானே அர்த்தம்.

நீதியற்ற சம்பிரதாயத்தனங்களில் இருந்து மாறுபட்ட மனிதர்கள் இன்னும் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. கல்யாணமும் வாழ்க்கையில் ஓர் அம்சம் என்பதில் எனக்குக் கருத்து முரண்பாடில்லை. படித்துச் சிந்திக்கத் தலைப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# எதிரொலி :-

● சரியான முறையிலே தொழுகையை நடத்த வேண்டும் எனத் தலிபான் நிர்வாகம் மக்களுக்குக் கண்டிப்பான உத்தரவுகளை வழங்கியுள்ளது.

★ 'பய' பக்தியை ஏற்படுத்துவதுதான் நோக்கமோ?

● ஜனாதிபதி சந்திரிகாவும் அனுரா பண்டாரநாயக்காவும் சந்தித்தனர் எனச் சொல்லப்படுவதை இருவருமே மறுக்கின்றனர்.

★ சந்தித்திருந்தால், 'சந்தி'' சிரிக்கும் வார்த்தைப் பிரயோகங்கள் இடம் பெற்றிருக்குமோ?

● உதைபந்தாட்டப் போட்டியில் நாங்கள் வெற்றிபெறா விட்டாலும், உலகத்தின் மிகச் சிறந்த அணிகளுடன் நாங்கள் விளையாடியிருக்கின்றோம் எனக் கூறுகின்றார் அமெரிக்க 'கோச்'!

★ மோதிரக் கையாலேதான் குட்டுப்பட்டோம் என்கிறாரோ?

● மாகாண சபைத் தேர்தல்களை ஒத்திப்போடுவதற்கு அரசு முயற்சி செய்கின்றது.

★ ஆகவே, இன்னுஞ் சில காலத்துக்கு மாகாண சபைகள் மா'காணா' சபைகளாக இருக்கப் போகின்றன!

● செய்தித் தணிக்கையை நீக்குவது இப்போதைக்குச் சாத்தியமில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்!

★ போரைப் பொறுத்தவரை, செய்தித் தணிக்'கை' தான் அரசாங்கத்தின் வலக்'கை'!

● பொலிஸ் தலைமைக் காரியாலயத்திலிருந்து முக்கியமான சில 'பைல்'கள் மறைவு!

★ 'போலி'ஸார் யாராவது எடுத்திருப்பார்களோ!

● அதிகாரிகள் கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால், மீண்டும் உண்ணாவிரதம் இருப்போம் என வேலையற்ற பட்டதாரிகள் கூறியுள்ளனர்.

★ அதாவது, பட்டதாரிகள், விரைவிலே 'பட்டினி தாரி' களாகப் போகின்றனர்!

● ஜனாதிபதியின் பணிப்பின்பேரில், களுத்துறைச் சிறைச்சாலை அத்தியட்சகர், வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

★ வழங்கப்பட்டது தண்டனையா? பாதுகாப்பா? என்பதைத் தீர்மானிக்க முடியாமல் தடுமாறுபவர்களும் இருக்கின்றனர்.

● வாஜ்பாய் அரசுக்கான ஆதரவை அ. தி. மு.க நிறுத்தாது; தொடர்ந்தும் வழங்கும்!

★ குலைக்கிற நாய்கடிக்காது என்பது உண்மை தானோ?

– இடியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை விசுவாசம் இல்லாத வாழ்க்கை யேசு கிறிஸ்துவின் சாட்சியாக்காது

**ஞாயிறு நற்பிரசாதம்**

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பேசுகின்ற பேச்சுக்களிலிருந்து, அவன் செய்கின்ற செய்கைகளிலிருந்து, அவனிடம் இயல்பாக அமைந்திருக்கின்ற பண்புகளிலிருந்து, அவன் யார், அவன் எப்படிப்பட்டவன், என்ன தொழில் செய்கின்றான் என்பதை நாம் இலகுவாக காணக்கூடியதாக இருக்கின்றது.

ஆனால் நாங்கள் பெருமையோடு கிறிஸ்தவர்கள் என்று கூறுமளவுக்கு நாங்கள் கிறிஸ்தவர்கள் தான் என்பதை எடுத்துக் காட்டுவதற்கு எங்களிடத்தில் என்ன பண்பு, என்ன விழுமியங்கள் இது கொண்டுள்ளன என்பதுதான் இன்றைய கேள்வி.

இக்கேள்விக்கு ஒரேயொரு பதில் இறை விசுவாசம். அந்த இறை விசுவாசம் என்பது இறைவனின் வார்த்தையை கடைப்பிடித்து அதற்கு அமைந்து வாழ்வது, ஒரே தேவனுக்கு பிரமாணிக்கமாயிருப்பது, நம்பிக்கையோடு வாழ்வது போன்ற பண்புகளைக் கொண்டது. சுருங்கக்கூறின் கிறிஸ்துவில் இறைவனின் மீட்பை ஏற்பதே எமது விசுவாசத்தின் அத்திவாரம்.

நாங்கள் ஆரம்பத்திலிருந்து வேதாகமத்தை புரட்டிப் பார்க்கின்ற போது இறைவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுடைய விசுவாசத்தை, இறைவன் நன்றாகப் பரிசோதிப்பதை நாம் கண்கூடாகக் காணலாம்.

இறைவிசுவாசத்தின் தந்தையென போற்றப்படுகின்ற ஆபிரகாமும் "உனது முதிர்ந்த வயதிலே உனக்கு ஒரு மகனைக் கொடுப்போம். அவன் மூலமாக உனது சந்ததியைப் பெருக்குவேன்" என்று இறைவன் உடன்படிக்கை செய்கின்றார்.

அதே போன்று அவருக்கு மகனைக் கொடுக்கின்றார், அவன் வளர்ந்து வருகின்ற அந்தப் பருவத்திலே அவனை தனக்கு பலி கொடுக்கும்படி இறைவன் ஆபிரகாமைக் கேட்கிறார். ஆபிரகாம் தாம் கொண்ட விசுவாசத்தின் நிலையில் தன் ஒரே மகனை பலியிடத்துணிகிறார், இதுவே விசுவாச சாட்சியத்தின் உச்சநிலை.

எம் வாழ்வில் தளர்ச்சியும் விரக்தியும் எம்மை விசுவா

(9 ஆம் பக்கம் பார்க்க)

அருள்திரு. பிரான்சிஸ் ஜெனம்

# மறைந்த கல்விப் பணிப்பாளரின் பணிகளைக் கூறும் முன்னோடி நூல்

**நூல் வரிசை**

நூல்: கலங்கரை விளக்கு
கல்விப் பணிப்பாளர் இரத்தினராசா
ஆசிரியர்: பொ. செல்லையா

உயிர்கள் தோன்றுவதும் மறைவதும் உலக இயற்கை. 'வந்தான் காண்; வந்தது போல் போனான் காண்; என மறைந்து போகும் மனிதர்களைப் போலன்றி, இவ்வுலகிற் பிறந்து தனது நற்செயல்களாலும், சிந்தனைகளாலும் தன் சமூகத்துக்கும் நாட்டுக்கும் அவற்றுக்குமப்பால் அனைத்துலகுக்கும் பணிகள் பல புரிந்து மறைபவர் பலராலும் புகழப்படுவர்; நினைவு கூரப்படுவர். கலங்கரை விளக்காகத் திகழும் அமரர் இரத்தினராசாவும் இத்தகையவரேயாவார்.

நல்லாசிரியனாகவும் கல்வி அதிகாரியாகவும், பிரதிக் கல்விப்பணிப்பாளராகவும், கல்விப் பணிப்பாளராகவும் எனப் பல பதவி நிலைகளில் நின்று செயற்பட்டுப் பணிகள் பல புரிந்தவர் அமரர் இரத்தினராசா. அன்னாரது நற்பண்புகளையும், நற்செய்கைகளையும் கல்வித் துறையில் அவர் ஆற்றிய அரும்பணிகளையும் தலைமைத்துவ சிறப்புகளையும் செவ்வனே ஆராய்ந்து கச்சிதமாகவும், தெளிவாகவும் மனதில் படியுமாறும் 'கலங்கரை விளக்கு கல்விப் பணிப்பாளர் இரத்தினராசா' என்னும் இந்நூல் கூறுவது விண்டுரைக்கத்தக்க ஒன்றாகும்.

இரத்தினராசாவின் நற்குண நற்செய்கைகளை நூலாசிரியர் விளக்கிச் சொல்லுமிடத்து, ஆங்காங்கே நல்லாசிரியனின் கடமை, கல்வியின் அவசியம், எமது கல்வித் துறையில் ஏற்படுத்தப்பட வேண்டிய மாற்றங்கள்சிறந்த தலைமைத்துவப் பண்புகள், மாணவர்களுக்கான முதலுதவிப் பயிற்சி முதலியனபற்றி அவர் தெரிவித்துள்ள அரிய கருத்துக்கள் மனங்கொள்ளத்தக்கவை.

இரத்தினராசாவிடம் குடிகொண்டிருந்த மனித நேயம் பற்றி நூலாசிரியர்.

"கல்விப் பகுதியில் பலர் பல காரணங்களால் நொந்து போய் இருந்தனர். சேவையின் முதுமை கணிக்கப்படாமல், கல்வித் தரத்தின் மேலாண்மைக்கு ஆதரவு

(9 ஆம் பக்கம் பார்க்க)

பேராசிரியர் க. அருணாசலம்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# அன்புநிறை அம்மாவே...

(மூன்றாம் பக்கத் தொடர்)

பட்ட நான் சமூக அநீதிகள் என உளமார உணர்ந்து கொண்டவற்றை அங்கீகரித்து ஏற்றுக் கொண்டு எப்படியம்மா சந்தோசமாக வாழ முடியும்.

**நுகர்வுக் கலாசாரம்**

அம்மா, நான் பட்டமளிப்புக்கு வாங்க இருக்கும் சேலையின் விலை குறித்து எழுதியிருந்தாய் மிக நல்ல விடயம். எல்லா விடயங்களிலும் எளிமை என்பது அற்புதமான அம்சம் தான். ஆனால் வளர்ச்சி என்ற பெயரில் நுகர்வு சாதனங்களைப் பெருமளவில் வாங்கிக் குவிப்பதையும் வசதிகளைப் பெருகுவதையும் இலட்சியமாகக் கொண்டு பெரும்பாலான மக்கள் வாழ்வதே இன்றைய சமூக யதார்த்தம். வாழ்க்கையை விட நவீன நுகர்வுப் பொருள்கள் முக்கியம் பெற்றுவருவதை நீயும் அவதானித்திருப்பாய் தானே. இந்த நுகர்வுக் கலாசாரத்தால் அதிகம் பாதிக்கப்படுபவளும் பெண் தான். அன்று வெளியுலகம் தெரியாத நிலையில் வாழ்ந்த பெண்மட்டுமல்ல. இன்று உலக அறிவைப் பெற்றுக் கொண்ட பெண்களில் கூட பட்டுப் புடைவையும், பவுண்நகையுமே இலட்சியமாய்க் கொண்டு வாழ்வோரும் இருப்பதைப் பார்க்கஎனக்கு நிறையக் கவலையாயிருக்கிறது. இந்தச் சாபம் எமக்கு ஏன் நேர்ந்தது எனச் சிந்தித்துப் பார்க்கின்றேன். எம் தாய்மாராகிய உங்கள் வளர்ப்பும் சமூக மனோபாவமும் தானே பெண்ணை அலங்காரப் பொம்மையாக்கியது.

சிறுவயதில் அம்மன் சிலைமாதிரி எனக்கு உடுப்பும், நகையும் அடுக்கிக் கோயில் குளமென்று கூட்டிப் போவாய். அண்ணா தனக்கும் நகை கேட்டால் கூட "பொம்பிளைப் பிள்ளையா நீ" எனத் தடுப்பாய். அண்ணாவை எளிமையாக வாழ எவ்வளவு அக்கறையோடு கற்றுக் கொடுத்தாயோ, அவ்வளவிற்கு என்னை அலங்காரப் பொம்மையாக்கி விருப்பமில்லாத போது கூட அவற்றைத் திணிப்பாய். பக்கத்து வீட்டாரிடையே உன்கௌரவத்தை (பணத்திமிரை) இனங்காட்டும் ஒரு பொம்மையாக என்னை வளர்த்தாய். இன்று நான் வெளியே வந்து என்னை இனங்காணமுற்படுகையில் எளிமையின் அழகு பிடிபட்டுப்போக வெற்று ஆடம்பரங்களை மனசார வெறுத்து ஒதுக்குகிறேன்.

பட்டமளிப்பு விழாவிற்கு நாம் ஓரிருவர் எளிமையாகப் போய் என்ன பலன்? பலருக்கும் வேடிக்கைப் பொருளாக வேண்டியும் வரலாம். மிகச்சரியானது எனத் தெரிந்த விடயத்திற்கூட தனித்து நிமிர்ந்துநிற்க நீ எனக்கு எப்போ கற்றுத்தந்தாய்? பரவாயில்லை, உன்வார்த்தை தந்த உத்வேகத்தில் எளிகையாக அது தரும் மிடுக்குடன் என் மனங்கொண்ட எண்ணத்தைப் பிரதிபலித்தபடி நான் பட்டமளிப்புக்குப் போகத்தான் போகிறேன். ஆனால் பக்கத்து விட்டுச் சங்கரி மாமியின் மகள் விலை உயர்ந்த சேலை வாங்கி பட்டமளிப்புக்கு உடுத்திவர அவா என்னைப் பார்த்துவிட்டு உன்னைச் சீண்டும் போது அவவுக்கு எளிமையைப்பற்றி எடுத்துரைப்பாயா? அல்லது சீ மானம் போச்சுதே (சேலையின் பெறுமதியில் தான்மானம் இருக்குதென்று) என்று புலம்புவாயா?

ஒரு கணம் கற்பனை பண்ணிப் பார்க்கிறேன். எனது கருத்தோடு இந்த விடயத்தில் நீ ஒத்துவந்ததையிட்டு மிகவும் சந்தோசம்.

இம்மடலின் மிகுதியைப் பின்னர் அனுப்புவேன்.

இப்படிக்கு
உங்கள் அன்பு மகள்

---

எனது இல:- டிடி/டிபிஎஸ்/ஏஜி/ஜென்/98,
மாவட்ட செயலகம்,
யாழ்ப்பாணம்.
11 – 07 – 98.

# பழமர நாற்றுக்கள் வழங்கலுக்கான கூறுவிலை கோரல்

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு பழமர நாற்றுக்களை வழங்குவதற்கு பழமர நாற்றுக்கள் அதிகளவு தேவைப்படுவதனால், பழமர நாற்றுக்கள் வழங்குவோரிடமிருந்து இதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

தேவையான பழமர நாற்றுவகை:
ஒட்டு மாங்கன்று, ஒட்டுத்தோடை,
எலுமிச்சை, கொய்யா,
கமுகம்பிள்ளை, பலாக்கட்டை

## பழமர நாற்றுக்கள் வழங்கல் தொடர்பான நிபந்தனைகள்

1) ஒட்டு மாங்கன்று:
மாங்கன்றுகள், 1 தொடக்கம் 2 வயதுக்கு உட்பட்டனவாகவும், நேரான, நிமிர்ந்த தண்டுத் தொகுதியுடையனவாகவும், 3 அடி உயரத்துக்குக் குறையாதவையாகவும், ஒரு சதமமீற்றர் அளவுக்குக் குறையாத விட்டத்தை உடையனவாகவும், வேர்கள் நன்கு வளர்ச்சியடைந்தவையாகவும், கவர்ச்சியான அரும்புகளைக் கொண்டனவாகவும், நோய்த்தாக்கம் அற்றனவாகவும் இருத்தல் வேண்டும்.

2) ஒட்டுத்தோடை;
மாங்கன்றுகளுக்குரிய தன்மைகள் இருத்தல் வேண்டும்.

3) எலுமிச்சை:
எலுமிச்சை நாற்றுக்கள், $1\frac{1}{2}$ அடி உயரத்துக்கு மேற்பட்ட வள்ர்சசியுடையனவாகவும், திடகாத்திரமானவையாகவும், நோய்த்தாக்கம் அற்றவையாகவும் இருத்தல் வேண்டும்.

4) கொய்யா:
ஓர் அடி உயரத்துக்குமேற்பட்டனவாகவும் நோய்த்தாக்கம் அற்றனவாகவும், திடகாத்திரமானவையாகவும் இருத்தல் வேண்டும்.

5) கமுகம்பிள்ளை:
நோய்த்தாக்கம் அற்றவையாகவும், திடகாத்திரமானவையாகவும் இருத்தல் வேண்டும்.

6) பலாக்கட்டை:
இரண்டு வருடங்களுக்கு மேற்பட்டதாகவும், நாலடிக்குக் குறையாத உயரமுடையதாகவும், $2\frac{1}{2}$ ச. மீ. விட்டத்திற்கு குறையாத பருமன் உடையதாகவும்: நோய், பூச்சித்தாக்கம் இல்லாததாகவும், தரமானதாகவும் இருத்தல் வேண்டும்.

பழமரநாற்றுக்கள் வழங்குநர்கள் தமது கூறுவிலைகளைக் குறிப்பிட்டு 1998 – 07 – 31 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக 'அரசாங்க அதிபர், கச்சேரி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் 'பழமர நாற்று வழங்கல்' எனக் குறிப்பிடவேண்டும்.

க. சண்முகநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ். மாவட்டம்.

## பழமர நாற்றுக்கள் வழங்கலுக்கான கூறுவிலை கோரல் மாதிரி விண்ணப்பப் படிவம்

.............................................
.............................................
.............................................

அரசாங்க அதிபர்,
செயலகம்,
யாழ்ப்பாணம்.

பழமர நாற்றுக்கள் வழங்கலுக்கான கூறுவிலை

தங்களது 12 – 07 – 98 திகதிய கூறுவிலைகோரல், அறிவித்தலுக்கு அமைய பழமர நாற்றுக்களை வழங்கக்கூடிய கூறுவிலை விவரத்தைக் கீழே குறிப்பிடுகின்றேன்.


| | ஒரு நாற்றின் விலை | வழங்கக் கூடிய தொகை | வழங்கக் கூடிய காலப்பகுதி |
|---|---|---|---|
| 1. கறுத்தக் கொழும்பான் | | | |
| 2. விலாட்டு | | | |
| 3. அம்பலவி | | | |
| 4. ஒட்டுத்தோடை | | | |
| 5. எலுமிச்சை | | | |
| 6. கொய்யா | | | |
| 7. கமுகம்பிள்ளை | | | |
| 8. பலாக்கட்டை | | | |

பெயர்:                ஒப்பம்:
முகவரி:               திகதி:

(சி/4247)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4ஆம் ஆண்டு நினைவலையில்



மலர்வு 19 — 03 — 1973

உதிர்வு 25 — 06 — 1994

செல்வன்

### மகாலிங்கம் புவேந்தன்

(பாபு)

திதி: 12-07-98


எம் குலவிளக்கு அணைந்ததுவோ
நித்தம் நித்தம் வாடுகிறோம் உன் பிரிவால்
துயர் போதுமையா எத்தனை எத்தனை
ஆசையாய் நீர்வாழ்ந்த அத்தியாயம்
ஒரு நொடியில் மறைந்ததுவோ!

என்றும் உன்நினைவில்:
அப்பா, அம்மா,
அத்தைமார், மாமா,
சித்தப்பாமார், சித்திமார்.

கண்டுவில் வீதி,
சாவகச்சேரி.

(57471)

## நெஞ்சம் நெக்குருகும்
## 31 ஆம் நாள் நினைவுப் பூக்கள்



திருமதி

### யோகராசா சாந்தகுமாரி

மண் மகிழ 29 — 08 — 1957

கண் நெகிழ 12 — 06 — 1998

பூவோடும் பொட்டோடும் போய்விட்டாய்
பொன்மகளே!
போனவிடந் தெரியாமற் புலம்பி
மயங்கலுற்றோம்
ஆவிகுலை வுற்றுந்தன் அன்னை கலங்குவதும்
அருங்கணவன் அகநெகிழ்ந்து அலறித்
துடிப்பதுவும்
கூவியழு துந்தனது குழந்தைகள் கலங்குவதும்
குணமிகுந்த சோதரர்கள் குமைந்து
பதறுவதும்
பாவியவன் காலன் பார்க்காமற் பறித்தனனோ?
பண்புருவே உன்நினைவு பாரிலென்றும்
வாழ்ந்திருக்கும்!

என்றும் உந்தன் நாமம் எங்கள்
நெஞ்சில் நிலையாகும்
மன்றுள் ஆடும் மன்னன் பாதம்
மகிழ்வாய் அமர்க! அஞ்சலிகள்.
சுபம்

பிரிவால் துயருறும்:
தாய், கணவன், பிள்ளைகள்,
சகோதரர்கள்.

ராஜா ஸ்ரோர்ஸ்,
அப்பையா கடைச்சந்தி,
யாழ்ப்பாணம்,
அறம்புலம், காரைநகர்.

(57492)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஜூலை 12

இருபாலை கிழக்கு அருள்மிகு கந்தசுவாமி கோயில் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமைகாலை சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

மகா கும்பாபிஷேகத்திற்கான பூர்வாங்க கிரியைகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் சிவஸ்ரீ சிவ. ஆறுமுக குருக்கள் தலைமையில் நடைபெற்று வருகின்றன.

அடியார்கள் எண்ணெய்க் காப்புச்சாத்தும் நிகழ்வுஎதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7மணி முதல் மாலை 5 மணிவரையும் இடம் பெறவுள்ளது.

(ஐ-8-30)

★ ★ ★

திருநெல்வேலி அருள்மிகு தலங்காவற் பிள்ளையார் கோயில் தேர்த்திருவிழா இன்று காலை 8 மணிக்கு நடைபெறும்.

நாளை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம் பெறும். (ஐ-103-30)

★ ★ ★

பருத்தித்துறை சவுனாய் ஓடை ஒழுங்கை மகா மாரி அம்மன் (பெரிய தெய்வம்) ஆலயசங்காபிஷேகம் நாளை திங்கட்கிழமை நண்பகல் நடைபெறவிருக்கின்றது

(உ-109)

★ ★ ★

புலோலி மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

17 தினங்கள் நடைபெறும் உற்சவத்தின் போது தினமும் சமயச் சொற்பொழிவும் இடம் பெறும். (உ-109)

### மீன் உற்பத்தி பெருக்கம்

செம்பியன்பற்று, ஜூலை 12

வடமராட்சி கிழக்குப் பகுதியில் மீன் உற்பத்தி அதிகரித்துள்ளதால் சந்தை வாய்ப்பின்றி மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் இப்பகுதி மீனவர்கள் கருவாடு உற்பத்தியில் ஆர்வங் காட்டி வருகின்றனர். மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி பகுதிகளிலேயே மீன் உற்பத்தி அதிகரித்துள்ளது.

(ஐ-36)

### மழலைகள் விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 12

கைதடி மேற்கு சரஸ்வதி மழலைகள் கல்விப் பூங்கா இல்லவிளையாட்டு போட்டி இன்று பி.ப 2 மணியளவில் பூங்காமைதானத்தில்திருமதி து. வனிதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அறவழிப் போராட்டக்குழு கல்விப்பகுதி இயக்குநர் க. கோபாலகிருஷ்ணனும், சிறப்பு விருந்தினராக கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரையும் கலந்து கொள்கின்றனர்.

(ஐ-5)

### தென்னையால் விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 12


கள்சீவுவதற்காக ஏறி தென்னை மரத்தில் இருந்து தவறி விழுந்து ஒருவர் படுகாயமடைந்தார்.

சிறுப்பிட்டிமேற்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நல்லதம்பி ரவீந்திரன் (வயது 33) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (ஐ-15)

## வாழ்த்துகின்றோம்

01 - 07 - 1998 பருத்தித்துறை மாவட்ட நீதிபதி முன்னிலையில் சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்ட அல்வாய் மேற்கைச் சேர்ந்த முன்னாள் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர்.



### திரு. மு. தம்பிப்பிள்ளை

அவர்களைப் பாராட்டுவதுடன் அவர்தம் சேவை எமது மக்களுக்குத் தொடர வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

அன்பர்கள்
அல்வாய் மேற்கு

(57490)

இன்று

## பொன் விழாவினைக்

கொண்டாடும்

பருத்தித்துறை, மேலைப்புலோலி

### சதாவதானி
### கதிரவேற்பிள்ளை
### சனசமூக நிலையத்திற்கும்

அதன் நிர்வாகிகளுக்கும்

தனது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் —

இந்நிலையம் ஆல் போல மென்மேலும் வளர்ச்சி அடைந்து பல்லாண்டு காலம் தனது பணியினைக் செய்ய வேண்டும் என இறைவனை வேண்டி

### வாழ்த்துகிறது

வத்தனை
மழலைகள் கல்விப் பூங்கா,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

(57501)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 20—04—1949

விண்ணில் 12—07—1989

**அமரர் மரியாம்பிள்ளை வில்லியம் ஜெயராஜா**

(நீர்ப்பாசனத்திணைக்களம், வவுனிக்குளம்)

அன்பின் திருவுருவே என் ஆசை அப்பாவே!
ஆண்டுகள் எத்தனை ஆனாலும்
ஆறிடுமோ எம் துயர்.

உங்கள் பிரிவால் வாடும்:
மனைவி, மகள், தாய், சகோதரர்,
மாமா, உறவினர் (சில்லாலை).

265, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(57516)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் கணித ஆசிரியர்

திரு. J F. றோஜ் நேசராஜாவின் அன்புத்தாயார்

### திருமதி பூமணி ஜோசப் பிரான்சிஸ்

அவர்களின் மறைவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/நல்லூர் ஸ்தான சி.சி.த.க
பாடசாலை

(57512)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரித் தின விழா

( 13-07-1998 )

யா / புனித ஹென்றியரசர் கல்லூரி
இளவாலை

அன்புடையீர்,

மேற்படி எமது கல்லூரியின் கல்லூரித் தின விழா 13 — 07 — 1998 திங்கட்கிழமை நடைபெற உள்ளது. எமது கல்லூரியில் பணியாற்றிய ஆசிரியப் பெருந்தகைகளையும், பழைய மாணவர்களையும், கல்லூரி அபிமானிகளையும். நலன் விரும்பிகளையும் இவ் விழாவில் சலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர்,
ஆசிரியர்கள், மாணவர்கள்.
ஹென்றியரசர் குடும்பம்.

( 57432 )

## வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம்,

நீர்வேலி-

### 26/5777 இலக்க லொறியினை கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு கொண்டு வருவதற்கான கேள்வி

ஷெ சங்கத்திற்குச் சொந்தமான 26/5777 இலக்க லொறியை கொழும்பிலிருந்து காங்கேசன்துறைக்கு லொறியில் எதுவித பழுதோ, சேதமோ ஏற்படாது கப்பல் மூலம் கொண்டு வந்து கொடுப்பதற்கான கேள்வி விண்ணப்பங்கள் சங்கத்தால் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பங்களை 20 - 07 - 98 ஆம் திகதிக்கு முன் ''பொது முகாமையாளர், வலி. கிழக்கு தெ. ப. ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

- பொது முகாமையாளர்.

நீர்வேலி.
1998-07-10. (சி-4251)

## மூன்றாம் மாத நினைவஞ்சலி



திருமதி
### யோகம்மா சின்னத்தம்பி

மலர்வு 22 - 06 - 1929
உதிர்வு 12 - 04 - 1998

பள்ளிப் பருவத்திலே தந்தையைப்பறிகொடுத்த
எம்மை
அள்ளி அணைத்து ஆளாக்கி வைத்த அன்புத்
தெய்வமே!

கள்ளம் கபடமற்ற உன் சிரிப்பு
நினைவில் நின்று எம்மை வாட்டுதே!
எங்கள் கண்கள் கலங்குவதை பொறுக்காத
அன்னையே!

இன்று வெள்ளம்போல் பாயும் எம்
கண்ணீரைத்துடைக்க
இங்கில்லையே உன் கரங்கள்

என்றும் மறக்க முடியாத பாச நினைவுடன் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சி. விவேகானந்தா (மகன்),
70/ 6. கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (57469)

## ரூ.5 ஆயிரம் கொடுப்பனவு

நெடுந்தீவு, ஜூலை 12

நெடுந்தீவில் நாளை திங்கட்கிழமை சுமார் இருநூறு குடும்பங்களுக்கு மீளகுடியமர்வுக் கொடுப்பனவான 5ஆயிரம் ரூபா வழங்கப்படும் என நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ஐ - 111)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

செம்பியன்பற்று, ஜூலை 12

வடமராட்சிகிழக்குமருதங்கேணி உதவி அரச அதிபரின் அம்பன் பணிமனையில் எதிர் வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் நடைபெற உள்ளதாக மருதங்கேணி உதவி அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-36)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ். பல்கலைக்கழக சகல விளையாட்டு அணிகளின் அனைத்து உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும் என்று பல் கலைக்கழக விளையாட்டு அவை கோரியுள்ளது. (ஐ-3)

## கவிதை நூல் அறிமுகம்

கவிஞர் ச. இளம்பூரணன் எழுதிய 'நெஞ்சே உன்னோடு' என்ற கவிதைத் தொகுதி - நூல் அறிமுக விழா யாழ். இலக்கிய வட்ட ஆதரவுடன் இலக்கியவட்டத் தலைவர் வே குமாரசாமி தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பண்டிதர் ச. சொக்கலிங்கம் அறிமுகவுரை நிகழ்த்துவார். பண்டிதர் ம. ந. கடம்பேஸ்வரன். செல்வி சுந்தரம் பிள்ளை மாதவி, மதுரகவி காரை எம். பி. அருளானந்தன் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவர். (ஐ-ரீ)


## வாங்கப்படும்

ரெலிபங்கன் (TELEFUN-KEN), பிலிப்ஸ்(PHILIPS), குறுண்டிக் (GRUNDiA) போன்ற பழுதடைந்த ரி. விகள் உதிரிப் பாகங்களுக்காக வாங்கப்படும்.

### வீனஸ் டெல்கா

284, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(நகாவிகாரை முன்பு)
(சி-4243)

## தொடர்பு கொள்ளவும்

ஈழத்துஎழுத்தாளர்கள், யாழ். பல்கலைக்கழகம், ஏனைய நிறுவனங்களின் வெளியீடுகள் பாடசாலை உப பாட நூல்கள், பரீட்சை வினா - விடைகள் விற்பனைக்கு முதலிடம் அளிக்கவிருப்பதால் மேற்படி நூல்களை விற்பனை செய்ய விரும்பவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

### லக்ஷமி புத்தக நிலையம்

இல. 312 (A)
[illegible]
யாழ்ப்பாணம்.
[சி/4227]



## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்தி சினிமா முன்பாக மேல்மாடியில்)

பெண்களுக்கு விடுதி வசதியுண்டு.
(10) பத்து பெண்களுக்கு மாத்திரம்
சேரவிரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும்.

(57495) — நிர்வாகி

## டெல்கா DELKA

உங்கள் கலர்ப்படச் சுருள்களை
துரித சதீயில் சமுவிப் பெற்றிட!

டெல்கா

தென்மராட்சி மக்களின் அவலநிலையை போக்கிடவும் உங்கள் கலர்படச் சுருள்கள் இனிமேல் கொழும்பு சென்று போக்குவரத்துக்களின் சிரமத்தால் அவஸ்தைப் படாமலும் அதே தராதரத்துடன் (Best Quality) யாழ்ப்பாணத்தில் சேவையாற்றி வரும்.

### சுப்பஸோ

கலர்ப்பட ஆய்வு கூடத்கின் உதவியுடன் உயர் தரமான COMPUTER 1997 மெஷின் மூலம் PHOTO PRINTING செய்திட உங்களை தென்மராட்சியில் அழைக்கின்றது

### "டெல்கா" DELKA

"டெல்கா"
மீன்' சந்தை அருகில், பஸ் நிலையம்.
சாவகச்சேரி.

(சி/ 4442)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் தம்பிஐயா பாலகிருஷ்ணப்பத்தர்

உதயம் 1930 - 11 - 23
அஸ்தமனம் 1998 - 06 - 12

திதி: திருதியை 12 - 07 - 1998

பொன்னாய் நவமணியாய்ப் போற்றுபுகழ்
கற்பகமாய்

மன்னா உலகில் வாழ்ந்தோனே!
பொன்னுலகு சென்றொரு மாதமே தீர்ந்தாலும்
எம்நெஞ்சம் கன்றுதுயர் நீங்காதுகாண்

நல்லோர் மதிக்கும் நவமணியே எங்கள் நற்பயனே
பல்லோர் பரவக்கைவண்ணம் காட்டிப்பணிபுரிந்தாய்
எல்லோருடனுமே இன்சொல்லே பேசும்
இயல்புடையோனே!

நல்லூர் பிறந்து சிறப்புடன்வாழ்ந்ததோர் நல்லவனே.

இன்று எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனைகளிலும், மதியபோசனத்திலும் பங்குபற்றும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியையில் பங்குகொண்டோருக்கும், அனுதாபக்கடிதங்கள், இரங்கற் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவி புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உங்கள். நினைவுடன் வாழும்:
மக்கள், மருமக்கள், பேரர்கள்.

86, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர். (57485)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்!

## நோயாளர் ஆக்காதீர்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மாம்பழ, பாலப்பழ "சீஸன்" இன்னும் முடியவில்லை. சந்தைக்கு வரும் இந்தப் பழங்களில் பெரும்பாலானவை செயற்கையாகப் பழுக்கச் செய்யப்பட்டவை இரசாயன மருந்து வகைகளைப்பயன்படுத்தியே பழங்கள் செயற்கையாகப் பழுக்கச் செய்யப்படுகின்றன.

இந்தப் பழங்களை உண்பதால் பாவனையாளர்களின் — மக்களின் — உடலில் நிச்சயமாக பாதிப்புகள் உண்டாகும். ஆனால் இதனைத் தடுப்பதற்கு நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாக இல்லை.

பழவகைகள் மட்டுமன்றி மரக்கறி வகைகளும் பாவனைக்குத் தடை செய்யப்பட்ட பூச்சி நாசனி, பூஞ்சண நாசனிகளைப் பயன்படுத்தியே உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஆனால் தடைசெய்யப்பட்ட பூச்சி, பூஞ்சண நாசினிகளும் வேறு விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட மருந்து வகைகளும் கட்டுப்பாடின்றி விற்பனை செய்யப்படுகின்றன.

பூச்சி நாசனிகள், பூஞ்சண நாசனிகள் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தக் கூடிய தகுதி பெற்ற அதிகாரிகள் எவரும் குடாநாட்டில் பணிக்கு அமர்த்தப்படாமையே இதற்குக் காரணம் என்ற தகவல் இப்போது வெளியாகி உள்ளது.

இது அதிர்ச்சி தரும், கவலை தரும் செய்தியாகும். நவீன விவசாய உற்பத்தி முறைகளை அனுசரித்து பயிர்ச் செய்கையில் இரசாயன உரவகைகள் பயன்படுத்தப்படுவதால், மிகக் குறிப்பாக அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுவதால், பாவனையாளர்களின் உடலில் நாளாந்தம் சிறிது சிறிதாக நஞ்சேறிக் கொண்டிருக்கிறது! அதனால் புதிய புதிய நோய்கள் மக்களைத் தாக்குகின்றன!!

அதற்கும் மேலதிகமாக தடை செய்யப்பட்ட நாசனிகள் மரக்கறி உற்பத்தியில் பயன்படுத்துவதனால் உண்டாகக் கூடிய உடற்கேடுகளை எழுதி விளக்க வேண்டியதில்லை.

போரினால் பல வகைகளாலும் நொந்தும், நலிந்தும் போயுமுள்ள மக்களை மேன்மேலும் நோயாளர்களாக்குவது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதாகும். குடாநாட்டு மக்களை மறைமுகமாகச் சாகடிக்கும் சதியாகவே இதனைக் கருத வேண்டும்.

சந்தையில் கிடைக்கும் விவசாய மருந்து வகைகளை கண்டபடி, நன்மை தீமை அறியாது விவசாயிகள் பயன்படுத்தக் கூடாது என்பது ஒரு புறம்.

மக்களுக்கு ஆபத்தை உண்டாக்கும் தடை செய்யப்பட்ட விவசாய மருந்துகளை இங்கு கொண்டு வந்து, சந்தைப்படுத்துவோர் நம்பிக்கைத் துரோகிகள் ஆவர். இவர்களை அடையாளங் கண்டு தண்டிக்க வேண்டும். அந்தக் கடமையைச் செய்வதற்கு தகுதி வாய்ந்த அதிகாரிகள் குடாநாட்டில் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும். இதுவரை இந் நியமனங்களைச் செய்யாத வடக்கு— கிழக்கு மாகாண சபையின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளின் அசமந்தத்தைக் கண்டிக்கிறோம். அவர்களும் தண்டிக்கப்பட வேண்டியவர்களே.

# ஐ.நா. தூதரகத்தின் நிதி உதவியுடன் பளையில் பல அபிவிருத்தித் திட்டங்கள்

தென்மராட்சி, ஜூலை 12

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகம் பளைப் பிரதேசத்தில் பல அபிவிருத்தித் திட்டங்களுக்கென 17 லட்சத்து 22 ஆயிரத்து 500 ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

பளை அரச ஆஸ்பத்திரியில் புதிய தண்ணீர்த்தாங்கி அமைக்கவும், ஆஸ்பத்திரி வார்ட்டுகள் திருத்தி அமைக்கவுமென 4 லட்சத்து 13 ஆயிரத்து 500 ரூபாவும் —

புலோப்பளை மேற்கு, புலோப்பளை கிழக்கு ஆகிய பகுதிகளில் ஆறு குழாய்க் கிணறுகள் அமைக்கவும், இப்பகுதியில் உள்ள பொதுக் கிணற்றினைப் புனரமைக்கவுமென இரண்டு லட்சத்து 77 ஆயிரம் ரூபாவும் —

இத்தாவில், வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையில் புதிய வகுப்பறைத் தொகுதி நிர்மாணிக்க 6 லட்சத்து 33 ஆயிரம் ரூபாவும் —

முகமாலை, புலோப்பளை ஆகிய இடங்களில் விவசாய வீதிகள் அமைக்கவென 3 லட்சத்து 99 ஆயிரம் ரூபாவும் —

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எஸ். குணாளசிங்கம் தெரிவித்தார்.

இந்த வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ஐ-117)

## தென்மராட்சியில் வாக்காளர் பட்டியல் திருத்தம்

தென்மராட்சி, ஜூலை 12

பளைப்பிரதேசத்தில் வாக்காளர் பட்டியல் புதுப்பிக்கும் பணிகள் அந்தந்த பிரிவு கிராம அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்த்துக் கொள்வதற்கான படிவத்தினைப் பெற்று விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

## ஆண்டு 11 மாணவருக்கு 4 பாடங்களில் விசேட பரீட்சை

குருநகர் ஜூலை, 12

யாழ். மாவட்டத்தில் 'சிடா' செயற்றிட்டத்துக்குட்பட்ட 142 பாடசாலைகளில் ஆண்டு 11 மாணவர்களுக்கு முக்கிய பாடங்களில் பரீட்சைகள் நடத்தப்பட உள்ளன.

இரண்டாம் தவணைப் பரீட்சையாக அமையும் இப் பரீட்சை விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், சமூகக்கல்வி ஆகிய 4 பாடங்களில் நடந்த செயற்றிட்ட கண்காணித்தல் சபை தீர்மானித்துள்ளது.

மேற்படி 4 பாடங்களுக்குமான பரீட்சைகள் முறையே எதிர்வரும் 21 ஆம், 22 ஆம், 23 ஆம், 24 ஆம் திகதிகளில் நடைபெறும் — என்றும் விஞ்ஞான பாடத்துக்கான செயன்முறைப் பரீட்சை 25 ஆம் திகதி நடைபெறும் எனவும் — யாழ். வலயங்களின் கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

## கோஷ்டி மோதலில் பெண்கள், சிறுவன் காயம்!

நெல்லியடி, ஜூலை 12

இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில், ஒரு சிறுவன், இரு பெண்கள் உட்பட ஆறு பேர்கள் காயமடைந்த நிலையில் மந்திகைமருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் கடந்த புதன் கிழமை நண்பகல் வடமராட்சிப் பகுதியிலுள்ள அல்வாய் மாலாவத்தையில் இடம் பெற்றது.

மோதல் சம்பவத்தின் போது கற்களும் கம்பிகளும் பாவிக்கப்பட்டதனால், அதே இடத்தைச் சேர்ந்தவர்களான வேலும் மயிலும் பிரதீபன் [வயது 13], சாந்தன் நாகலிங்கம் [வயது 50], யோகேஸ்வரன் சகுந்தலாதேவி [வயது 35], சிவனேஸ்வரன் குணேஸ்வரி வ்யது] 29], வல்லி சிவனேஸ்வரன் [வயது 35], கணபதிப்பிள்ளை யோகேஸ்வரன் [வயது 35] ஆகிய ஆறுபேர்களுமே காயமடைந்தனர்.

[ஐ-109]

## முத்திரையிடல்

யாழ். செயலக நிறுவை அளவைத் திணைக்களத்தினால் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் 21 ஆம்திகதிவரை காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை மருதனாமடம் பிரதேசசபை அலுவலகத்தில் வைத்து அப்பகுதி நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும்.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அப்பகுதிச் சந்தை வியாபாரிகள், கடை உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர்கள், விறகுகாலை உரிமையாளர்கள் யாவரும் தமது தராசுப்படிகளுக்குத்தவறாது முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ். செயலக நிறுவனங்கள் அளவைகள் திணைக்களப் பொறுப்பதிகாரி கா. நாகலிங்கம் தெரிவித்தார்.

## அளவையியல் பாடத்தில் 20பேருக்கு விசேட அனுமதி

### யாழ். பல்கலைக்கழகத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 12

1996 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களில் அளவையியலை ஒருபாடமாக எடுத்த 20 மாணவர்கள் விசேட பாடங்களின் அடிப்படையில் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆர். கலையரசி, எஸ். சுபாசினி, என். ஜெயகௌரி, வி. மணிவண்ணன், கே. ரஜனி, என். நாகதர்ஷினி, வை. பிரேமளா, பி. பத்மநேசன், எஸ். சிவாஜினி, பி. ஸ்ரீஜெயவதனா, கே. ஜோகநாதன், ஜி. பவாநந்தினி, எஸ். கிரிஜா, பி. காண்டீபன், பி. மணிவண்ணன், எஸ். நளாயினி, ரி. எம். சிறிகுமார், எம். செல்வரஞ்சினி, எஸ். சுகந்தினி, ஜே. தனுஷியா ஆகிய இருபது மாணவர்களுமே யாழ். பல்கலைக்கழகத்தில் தத்துவம் கற்பதற்கு விசேட பாடத்தின் அடிப்படையில் விசேட அனுமதிபெற்றுள்ளனர்.

ஏற்கனவே யாழ். பல்கலைக்கழகத்தில் விசேட பாடங்களின் அடிப்படையில் 160-க்கும் மேற்பட்டோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது பதிவுகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் க. குணராசா கேட்டுள்ளார்.

(ஐ 9-7)

## வெள்ளி விழா

திருநெல்வேலி, ஜூலை 12

யாழ்ப்பாணம் லயன்ஸ் கழகத்தின் வெள்ளி விழாவும், புதிய நிர்வாக சபை பதவி ஏற்பு வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் கழகத் தலைவர் லயன் எஸ். என். கதிரவேலு தலைமையில் நடைபெறவுள்ளன. இவ் விழாவில் பிரதம அதிதியாக பிராந்தியத் தலைவர்லயன். டாக்டர் எஸ். எஸ் அருளானந்தன கலந்து கொள்வார். கௌரவ விருந்தினராக யாழ். அரசினர் போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் டாக்டர் எஸ், குகதாசன் கலந்து கொள்வார்.

உள நல வைத்திய நிபுணர் டாக்டர் எஸ். சிவசங்கர் விசேட சொற்பொழிவாற்றுவார். ஊனமுற்றவருக்கு முச்சக்கர வண்டி அன்பளிப்புச் செய்தல், பளை மகா வித்தியாலயத்திற்கு விளையாட்டு, மனையியல் உபகரணங்கள் வழங்குதல் பாடசாலை மாணவருக்கு சப்பாத்துஅன்பளிப்புச் செய்தல் ஆகிய பல்வேறு நிகழ்வுகளும் இவ் விழாவில் இடம் பெறவுள்ளன. (ஐ-135)

## வலைபந்தாட்ட கழகங்கள் பதிவு

யாழ்ப்பாணம், ஜூலை12

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படவிருக்கும் வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் பங்குபற்றவிருக்கும் கழகங்கள் பல்கலைக்கழக உடற்கல்வித் துறையுடன் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

### நாளை

ஆனி - 29

திங்கட்கிழமை

திதி: சதுர்த்தி
மாலை 5.28

நட்சத்திரம்: சதயம்
பின்னிரவு 2.00 வரை.

சங்கடஹர சதுர்த்தி
விரதம்

சுபநேரம் 11.59 - 1.29
ராகுகாலம்: 7.29 - 8.59

(பகலுக்கும் இரவுக்கும்
பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஓர் அறிவாளியின் பேனையில் இருக்கும் மை, தியாகியின் இரத்தத்தைவிடப் புனிதமானது.

-முகம்மது நபி.

## மறைந்த கல்விப்...

(நான்காம் பக்கத்தொடர்)

அளிக்கப்படாமல், வழங்கப்பட வேண்டிய ஊதியம் வழங்கப்படாமல் — ஓய்வு தேய்வாகக் கொள்ளப்பட்டதால் சோகக்கண்ணீர், இடமாற்றம்—நியமனம் போன்றவற்றால் பழிவாங்கப்பட்டதனால் பயந்த நிலையில் நடுங்கிய பலருக்கு அபயமளித்து நொந்தவர்களை மகிழ்விப்பதில், சோகமே உருவானவர்களின் கண்ணீரைத் துடைப்பதில், அஞ்சியவர்களுக்குத் துணிவினை ஊட்டிச் சாந்தி அளிப்பதில், கல்வி உலகின் இருளை நீக்கி ஒளிதனை ஊட்டுவதில் ஓர் அரிமாவாக, என் கடன் பணி செய்வதே எனக் கொண்டு, வாழ் நாள் முழுவதும் வேண்டுவ வேண்டியாங்கு இயலுங் கால் தன் குணம் குன்றிப் பிறர் குணம் பெருகிட வாழ்ந்த பெருமகன்! கொக்குவில் லயன் கழக உறுப்பினர் லயன் இரத்தினராசா!'' — என விளக்கியுள்ளமை அவதானித்தற்குரியது.

பல்கலைச் செல்வராகவும், முத்தமிழ்க்கலைஞராகவும், பகுத்தறிவுச் செம்மலாகவும் சிறந்த பேச்சாளராகவும், நாடறிந்த வித்தகராகவும் திகழ்பவர் இந்நூலாசிரியரான அ. பொ. செல்லையா. சேரன், வரைபாலன், அண்ணாதாசன், பொற்செல்வன், தென்னவன் முதலிய புனைபெயர்களில் பல நாடகங்களையும், சிறுகதைகளையும், கட்டுரைகளையும், நூல்களையும் எழுதி வெளியிட்டவர். முதிர்ந்த அனுபவமும் நிறைந்த அறிவும எழுத்தாற்றலும் மிக்க அவரது இந்நூல் பல வழிகளிலும் முதன் முயற்சியாகவும், முன்னோடி முயற்சியாகவும் விளங்குதல் குறிப்பிடத்தக்கது.

அமரர் இரத்தினராசாவின் வாழ்வுப் பணிகளும் விரிவாக ஆராய்ந்து எழுதப்பட வேண்டியனவாகும். அத்தகையதொரு முயற்சிக்கு இந்நூலில் இடம் பெற்றுள்ள அரிய பல தகவல்களும் முன்னோடியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

அமரர் இரத்தினராசாவின் பெயரில் நிதியம் திரட்டப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில் "இதில் வரும் ஊதியமனைத்தும் கல்விப் பணிப்பாளர் இரத்தினராசா புலமைப் பரிசில் நிதியத்தில் சேர்க்கப்படும்'' என நூலாசிரியர் குறிப்பிட்டுள்ளதை மனங்கொண்டு எம்மால் முடிந்த வரை உதவுதல் எமது தலையாய கடமைகளுள் ஒன்றாகும்.

## இறை ..

(நான்காம்பக்கத் தொடர்)

சத்தில் நிலைத்திருக்க புடமிடப்படுவதை இறை நம்பிக்கையில் எதிர்கொள்ளும் போதுதான் நாமும் கிறிஸ்துவின் சாட்சிகளாகின்றோம். "என்னில் விசுவாசம் கொள்பவன் என்றுமே சாகான்'' என்ற இறையேசுவின் வார்த்தையும் வாழ்க்கையும் எம்மை வழிகாட்டும் என்ற விசுவாச வாழ்வில் கிறிஸ்துவின் சாட்சிகளாக மாறவே இக்காலம் எம்மை அழைக்கிறது.

கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால் ஒளிய அது பயன் தராது —என்று சொன்ன வார்த்தை போன்று தன் இறப்பை எதிர் கொண்டதால் தான் இந்த உயிர்ப்பும் நம்பிக்கை தரும் பங்கேற்கும் மகிழ்ச்சிக்கு எம்மை அழைத்துச் செலலும் நிகழ்வாக நினைவு கூர வைக்கிறது. அந்த விசுவாசத்தில் கிறிஸ்துவுடன் ஒன்றித்து சாட்சி பகரும் கிறிஸ்துவனாக வாழவே உன்னையும் அழைக்கிறது. விசுவாச வாழ்வுதான் சாட்சியத்தின் வாழ்வுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

உயர் ரக புறோயிலர் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 101, பலாலி வீதி, (இலுப்பையடிச் சந்தி அருகில்) கந்தர்மடம் யாழ்ப்பாணம். வாடிக்கையாளர்களுக்கு, சலுகை உண்டு. [57511]

### தவறிவிட்டது

பாலையா சிவபாக்கியம், பா. கனிகா ஆகியோரின் தேசிய அடையாள அட்டை யா[இல. 608474234]. விசேட அடையாள அட்டையும் ஒரு சோடி வளையல்களும், பேரின் உடன் C. T. B பஸ்ஸில் பயணம் செய்யும் போது பருத்தித்துறைக்கும் கல்வியங்காட்டுக்கும் இடையில் 09-07-98 இல் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்: மா. நாகேஸ்வரன். 447. இராமலிங்கம் ரோட், நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும்.
[57517]

நீலப்பேர்கடன் 495339 என்ற இலக்கமுடைய சாரதி லைசென்ஸ் 08. 07. 1998 இல் கொக்குவில், காவடி, மானிப்பாய், சுன்னாகம் உடுவில் பகுதிக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் என். ரவீந்திரன், கிராம சேவையாளர், காவடி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
[சி/4252]

### கண்டீர்களா?

கோயில்வீதி கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த ஸார்மிலா இரகுநாதன் ஆகிய எனது விசேட அடையாள அட்டையும், பாடசாலை [யா/இந்து மகளிர் கல்லூரி] அடையாள அட்டையும் நந்தாவில் அம்மன் கோயில் தீர்த்தோற்சவத்தின் அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தோர் யா/ சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் ஒப்படைக்கவும் அல்லது அதிலுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
[57519[

இராசேஸ்வரி சிவராசா, இராசாவின் தோட்டம். யாழ்ப்பாணம், 436210230V இலக்கமுடைய தேசியஅடையாள அட்டையும், இராசேஸ்வரி இரகுநாதன், கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு விசேட அடையாள அட்டையும் கல்வித்திணைக்கள வேலை அடையாள அட்டையும் நந்தாவில் அம்மன் கோயில் தீர்த்தோற்சவத்தின் அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தோர் யா/ சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் ஒப்படைக்கவும் அல்லது அதிலுள்ளமுகவரிக்கு அனுப்பிவைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(57518)

### O/L MATHS 98

33 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். சு. ஆறுமுகநாதன், இல. 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி,
[57399]

### கலர் மீன்கள்

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய இன கலர்மீன்கள் விற்பனைக்கு உண்டு. A. அருளானந்தம், இல. 588/8, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை), நண்பகல் 12 மணியிலிருந்து பார்வையிடலாம்.
[57418]

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (புறொயிலர்) மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். ஒவ்வொரு நாளும் கிடைக்கும். (காலை தொடக்கம் மாலை வரையும்), Lucky Farm Sales Center, Palaly, Road, Thirunelvely.
[57525]

புறொயிலர் கிலோ ரூ. 150, லேயர் கிலோ 130 இங்கு விற்பனைக்கு உண்டு. அரைக் கோழி இறைச்சி ரூ. 120 இலிருந்து பெற்றுக் கொள்ளலாம். சுத்தம் செய்துகொடுக்கப்படும். 54/2, சந்நனமாதாகோயில்முன்ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, யாழ்ப்பாணம். [57507]

### இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. கிலோ150/-. தினசரி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [57491]

இறைச்சிக் கோழி புறொயிலர் (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல. 15, 6 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம் (சின்னக் கடைக்கு அருகில்).
[57487]

புறொயிலர் இறைச்சிக் கோழிகள், நன்கு வளர்ச்சியடைந்த ஊர்க்கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்தும் பெற்றுக்கொள்ளலாம். இல. 40/6, புகையிரத கிழக்கு வீதி, கந்தர்மடம். (செல்ல நாகபூஷணி அம்மன் கோயில் அருகில்).
[57522)

## யா/ நடேஸ்வராக் கல்லூரி
## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் 25—07—98 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு

யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி
மண்டபத்தில் நடைபெறும்.

புதிய செயற்குழு தெரிவு நடைபெற இருப்பதால் பெற்றோர்கள் தவறாது சமுகமளிக்கவும்.

– அதிபர்

(சி/ 4242)

## V.M.R. தொலைத்தொடர்பு நிலையம்
## [V,M.R, Commiunication]

வாடிக்கையாளருக்கு ஒரு நற்செய்தி. உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள உங்கள் உறவினர்களுடனும், நண்பர்களுடனும் சற்றே நிமிடத்தில் தொடர்பு கொள்ள நாட வேண்டிய இடம்

V.M.R. தொலைத் தொடர்பு சேவை

தூர இடத்து வாடிக்கையாளருக்கு இருப்பிட வசதியுடன் முன்னுரிமை வழங்கப்படும்.

நன்றி

வத்தனை,
புலோலிமேற்கு,
பருத்தித்துறை.

(57524)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
10
—
1-0
—
1916



மறைவு
15
—
06
—
1995

அமரர்
## நாகமணி முத்துச்சாமி
(திருமேனி)

எங்கள் நல்ல தலைவனாய், தந்தையாய், நல் மாமனாகவும் அன்புக்கு இனிய பேரனாகவும் எம்மை நல்வழி நடத்திய எங்கள் தெய்வமே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து மூன்று ஆண்டுகள் கழிந்தாலும் உங்கள் நினைவு என்றும் எங்கள் மனதை விட்டு அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்;

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

16/12, விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (57521)

உ

## மேலைப்புலோலி
## சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளை
## சனசமூக நிலையத்தின்
## பொன் விழாவும்
## சதாவதானி
## நா. கதிரைவேற்பிள்ளை
அவர்களின்
## 91 ஆவது ஆண்டு
## நினைவு விழாவும்

காலம்: 1998 07 12 ஞாயிற்றுக்கிழமை
காலை நிகழ்ச்சிகள் - காலை 9. 30 மணி
மாலை நிகழ்ச்சிகள் - பிற்பகல் 3. 30 மணி.
(இலங்கை நேரம்)

இடம்: சதாவதானி அரங்கு
[நிலைய முன்றல்]

தலைவர்: திரு. அ. துரைசிங்கம்
(நிலையத் தலைவர்)

காலை நிகழ்ச்சி
திரு ந. தங்கராசா
(நிலையத் துணைத் தலைவர்)

மாலை நிகழ்ச்சி
பிரதம விருந்தினர் - கலாநிதி க. குணராசா
[செங்கை ஆழியான்]
(பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்)

**காலை நிகழ்ச்சிகள்**

★ மங்கள விளக்கேற்றல்
★ தலைமையுரை
★ சிறப்புச் சொற்பொழிவு
★ மலர் வெளியீடு
★ பரிசில் வழங்கல்

**மாலை நிகழ்ச்சிகள்**

★ மங்கள விளக்கேற்றல்
★ தலைமையுரை
★ சிறப்புச் சொற்பொழிவு
★ கௌரவிப்பு
★ தாளலய இசை நாடகம்:
'பலதும் பத்தும்'
★ பட்டி மண்டபம்
தலைப்பு: மனித வாழ்வை மேம்படுத்துவதில் பெரும்பங்கு வகிப்பது
அறிவா? ஒழுக்கமா?
★ நாடகம்
யாழ். மாவட்டத்தில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடத்திய நாடகப் போட்டியில் முதலாம் இடம்பெற்ற
பளை, இரத்தினகுமார் குழுவினரின்
## 'அரிச்சந்திர மயான காண்டம்'
[சரித்திர நாடகம்]
★ நன்றியுரை
★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

க. இராமச்சந்திரன்
செயலாளர்

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம்,
தம்பசிட்டி, புலோலிமேற்கு, பருத்தித்துறை.

விழா சிறப்புற வாழ்த்துவோர்;
## நேரு படப்பிடிப்பாளர்
சாளம்பை, புலோலி மேற்கு,
பருத்தித்துறை. [57493]

மேலைப்புலோலி
சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சன சமூக நிலையத்தின்
## பொன் விழா வாழ்த்து

சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூக நிலையம் சமூக முன்னேற்றத்திற்குப் பணியாற்றித் தனது ஐம்பதாவது ஆண்டில் இன்று பொன் விழாவைப் பொலிவுடன் கொண்டாடுகின்றது.

எழிலோடு சிறந்திலங்க மனம் திறந்து
## வாழ்த்துகின்றோம்!

சதாவதானி கதிரைவேற்பிள்ளை
சிக்கன கடனுதவு
கூட்டுறவுச்சங்கம்.

மேலைப் புலோலி,
பருத்தித்துறை,

(57494)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
பழைய மாணவர் மன்றம்

## வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்: 19-07-1998 ஞாயிற்றுக்கிழமை
காலை 9 30 மணி

இடம்: விவேகானந்த மண்டபம்

தலைவர்: திரு. வி. ஸ்ரீசக்திவேல் அவர்கள்
(தலைவர், பழைய மாணவர் மன்றம்)

காலை 10 மணி ஒன்று கூடலும்
உள்ளக விளையாட்டுகளும்
நண்பகல் 12.30 மணி (S L T) புதிய அலுவலகம் திறப்பு விழா
பிற்பகல் 1.00 மணி மதிய போசனம்
பிற்பகல் 2.00 மணி பழைய மாணவர் கௌரவிப்பு
திரு. செ. சுப்பிரமணியம் அவர்கள்
முன்னாள் செயலர், உப தலைவர்

பிற்பகல் 3.00 மணி பொதுக் கூட்டம்

1. தேவாரம்
2. மறைந்த பழைய மாணவர், ஆசிரியர், அதிபர்களுக்காக மௌன அஞ்சலி
3. தலைமையுரை
4. வருடாந்த அறிக்கை
5. நிர்வாக சபை அறிக்கை
6. கணக்கறிக்கை
7. பிரேரணைகள்
   புதிய நிர்வாக சபை தெரிவு
9. கணக்காய்வாளர் தெரிவு
10. பிறவிடயங்கள்
    நன்றியுரை
    தேவாரம்

அனைத்துறுப்பினர்களையும் புதிய அங்கத்தவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலைவர் செயலாளர்

(57536)

## கண்ணீர் அஞ்சலி

இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிப் பிரிவின் செயலாளரும் யாழ். கிளையின் உதவிச் செயலாளருமாகிய

சி. கணேசன்

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

### திரவியரத்தினம் சிதம்பரப்பிள்ளை

அவர்கள் சிவபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தொண்டர், உறுப்பினர், ஊழியர்,
நிர்வாகக் குழுவினர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை.

(சி/4255)

யாழ்.
லயன்ஸ் கழகம்

## வெள்ளி விழாவும் புதிய நிர்வாகப் பதவியேற்பும்

காலம்:- 12 - 07 - 1998 காலை 9-00 மணி
இடம்:- சென். ஜோன்ஸ் கல்லூரி
யாழ்ப்பாணம்

பிரதம விருந்தினர்.-
லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம்
(பிராந்தியத் தலைவர்)

சிறப்பு விருந்தினர்:-
டாக்டர் எஸ், குகதாசன்
(கண் வைத்திய நிபுணர்)

கௌரவப் பேச்சாளர்:-
டாக்டர் ஆர். சிவசங்கர்
(உவவள வைத்திய நிபுணர்)

நிகழ்ச்சி நிரல்

1. மங்கள விளக்கேற்றல்
2. செயலாளர் அறிக்கை
3. வெள்ளி விழா மலர் வெளியீடு
4. புதிய நிர்வாகப் பதவியேற்பு
5. செயற்றிட்டங்கள்
6. நன்றியுரை.

தலைவர்
யாழ். லயன்ஸ் கழகம்

(சி-4254)

## விசேட அ. அட்டை

குருநகர் ஜூலை 12

ஜே 68, ஜே 69 றெக்கிள மேசன் கிழக்கு, குருநகர் மேற்கு கிராமசேவகர் பகுதிக்கு உட்பட்டவர்களது விசேட அடையாள அட்டைகள் நாளை திங்கட்கிழமை காலை 9-00 மணி முதல் சின்னக்கடை இராணுவ முகாமில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கிராம உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (இ-51)

## நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ் போதனா வைத்திய சாலையில் கடமையாற்றும் அமைய சிற்றூழியர்களை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ளது. (இ-139)

## மலர் வெளியீடு

திருநெல்வேலி, ஜூலை 12

திருநெல்வேலி அருள்மிகு தலங்காவல் பிள்ளையார் ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவை முன்னிட்டு இடம்பெறும் 'ரதோற்சவ சிறப்பு மலர்' வெளியீடு இன்று காலை 8. 00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும். (இ-7)

## மாமரத்திலிருந்து விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

மாங்காய் பிடுங்குவதற்காக மாமரத்தில் ஏறியவர் தவறிக்கீழே விழுந்து காயமடைந்தார்.

மானிப்பாயில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் அருட்செல்வம் சுதாகரன் (வயது 15) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ- 15)

## அறநெறி பாடசாலை

தென்மராட்சி, ஜூலை 12

புலோப்பளையில் இந்து அறநெறிப் பாடசாலை அறவழிப் போராட்டக் குழுவின தலைவர் வீ. ஜீ. தங்கவேல் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பளைப் பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பளைப் பிரதேசத்தில் ஏற்கனவே இத்தாவில், முகாவில் ஆகிய பகுதிகளில் அறநெறிப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (இ-117)

## கரம் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 12

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்பட்டுவரும் கரம் சுற்றுப்போட்டியின் இறுதி நிலைப் போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு பல்கலைக் கழகமாணவர் பொது அறையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஜீட்ஸ் தாகூர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்குவார். (இ)

## கலை விருந்து

யாழ்ப்பாணம் ஜூலை 12

சைவ வித்தியா விருத்திச் சங்கம் சிறுவர் நிறைவு வாழ்வு இல்ல நிதிக்காக வழங்கும் ''கலை விருந்து'' இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு இளங்கலைஞர் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக் கழக வரலாற்றுக் கழகம் வழங்கும் நாட்டிய நாடகம் ''காலம் தந்த கோலமகள்'' மற்றும் யாழ்ப்பாண நாட்டார் வழக்கியல் கழகம் வழங்கும் 'நாட[illegible]' [illegible] யவை இந்த நிகழ்வில் இடம் பெறும். (இ - [illegible]

# METHODIST CHURCH

## Vocational Training Centre

No 163, 165, Main Street, Jaffna.

Announcers Starting a Course
in

★ Basic Electronics and Telecommunication

★ Basic Digital Electronics

on
Wednesday The July 15 th 98
at
11-00 a.m

All the Students who have Studied up to G. C. E. (Ordinary Level) can join the course. Please Make Sure you come on the First Day and Register your Names.

- The Manager

120. Second Cross Street,
Jaffna

(C/1259)

உ

## பொன்னாடை போர்த்தி கௌரவிப்பு

நல்லூர் மூத்த விநாயகர் தேவஸ்தானத்தில் கடந்த 01 — 07 — 1998 புதன்கிழமை தொடக்கம் 10—07—1998 வெள்ளிக்கிழமை வரை வெகு சிறப்பாக மகோற்சவத்தை நடத்திய

பிரதமகுரு
பிரம்மஸ்ரீ தானு வாசுதேவ சிவாச்சாரியார் அவர்களுக்கும்

உதவிக்குருவாக
பிரம்மஸ்ரீ ச. ஸ்ரீதரசர்மா அவர்களுக்கும்
பிரம்மஸ்ரீ சௌ. சசிகுமாரசர்மா அவர்களுக்கும்

ஆலய குரு
பிரம்ம ஸ்ரீ செ. சுகுமாரசர்மா அவர்களுக்கும்

பொன்னாடை போர்த்தி, கௌரவித்து, குரு அருளாசி பெற்று மகிழ்வடைந்தனர்.

சுபம்

குரு அருள் ஆசி வேண்டிநிற்கும்:
தர்மபரிபாலன சபை

(57532)

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம்
நடத்தும்

## மாவட்ட ரீதியிலான 'தாச்சிச் சுற்றுப் போட்டி'

விதி முறைகள்:

1. இதுவரை மேற்படி சங்கத்தில் பதிவு செய்த கழகங்கள் தங்கள் விண்ணப்பத்தை கையளிக்கலாம்.
2. இதுவரை பதிவு செய்யாத - பதிவு செய்வதற்கு விருப்பமுடைய கழகங்கள் தங்கள் பிரதிநிதிகளுடன் சங்க முக்கியஸ்தர்களை நேரில் சந்தித்தும் விண்ணப்பங்களைக் கையளிக்கலாம்.
3. விண்ணப்பிக்கும் கழகங்கள் 19-07-98 இல் நடைபெறவிருக்கும் அணி ஒழுங்குத் தேர்வில சண்டிப்பாகக் கலந்து கொள்ளவேண்டும்.

தொடர்பு முகவரி:

நா. பேரம்பலம்
(தலைவர்)
இ. போ. ச.,
கோண்டாவில்.

கா. பீதாம்பரம்
(செயலாளர்)
பிரதேச செயலகம்,
தெல்லிப்பழை.

செ. சண்முகலிங்கம் (பொருளாளர்)
செயலகம், கச்சேரி, யாழ்ப்பாணம்.

(57539)

## மரண அறிவித்தல்

### நரசிங்கம் சுப்பிரமணியம்

(சுப்பண்ணை)

கிளாலை கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் உரும்பராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட நரசிங்கம் சுப்பிரமணியம் 11-7-98 அன்று அகால மரணமானார்.

அன்னார் நல்லம்மாவின் அன்புக் கணவரும் நாகேஸ்வரி. சர்வகலாதேவி. பரமேஸ்வரி, சிறிகுமார், (A/L 2000 ஆண்டு மாணவன், மகாஜனாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிச்சந்திரன், சுப்பிரமணியம் (லங்கா சிமெந்து லிமிட்டெட்), ஜெயரூபன் ஆகியோரின் அன்பு மாமனாரும் லாவனிதாவின் பேரனும் கனகரத்தினம், சுந்தராம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-7-98 ஞாயிற்றுக்கிழமை உரும்பராய் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுப்பிரமணியம்
(மருமகன்)

உரும்பராய் கிழக்கு,
உரும்பராய்.

(57545)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லை...

(முதலாம் பக்கத் தொடர்)
துள்ளார்.

கிளிநொச்சி அரச அதிபர் சி. இராசநாயகம் தனது அறிக்கையில்:

34 ஆயிரத்து 381 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க முன்னர் அனுமதி அளிக்கப்பட்டிருந்ததாகவும் —

அது கடந்த வருடம் 18 ஆயிரத்து 289 குடும்பங்களாகக் குறைக்கப்பட்டதாகவும் —

தற்போது நிவாரண வெட்டுக் காரணமாக 8 ஆயிரத்து 884 குடும்பங்கள் மட்டுமே நிவாரணம் பெறும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அரைப்பட்டினியில் வாழ்ந்த மக்கள் நிவாரண வெட்டால் நினைத்துப் பார்க்க முடியாத நிலைக்கு இட்டுச்செல்லப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (இ-9-7)


இருபாலை கிழக்கு

### அருள்மிகு கந்தசுவாமி கோயில்

(முனி அப்பாள் கோயில்)

நூதன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ பிரதிஷ்டா

### மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

11-7-98 வெள்ளி பின்இரவு 4 30 மணி முதல் பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகியுள்ளன.

14-7-98 செவ்வாய்க்கிழமை
காலை 7. 00 மணி - மாலை 5 00 மணி வரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல்.

15-7-98 புதன்கிழமை காலை 5. 30 மணிக்கு
தூபி அபிஷேகம் தொடர்ந்து
சூரிய உதயம் கோதூளி முகூர்த்தத்தில்
மஹா கும்பாபிஷேகம்.

கும்பாபிஷேக பிரதம குரு:-
''கிரிஜா வீபுதர்''
சிவஸ்ரீ சிவ. ஆறுமுகக்குருக்கள்
(ஸ்ரீ ஞானப்பழநி ஆண்டவர் தேவஸ்தானம், கோண்டாவில்)

தர்மகர்த்தாக்களும், திருப்பணிச்சபையினரும்.
இருபாலை கிழக்கு, (சி/4253)


## நெருப்புக்குச்சி மருந்து வெடியில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

நெருப்புக்குச்சி மருந்தில் வெடி செய்து வெடிக்க வைத்து விளையாடிய சிறுவன் அது வெடித்துச் சிதறியதில் காயமடைந்தார்.

இடைக்காட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சோமகாந்தாம் தணிகைநாதன் (வயது 12) என்ற சிறுவனே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (இ- 15)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்)
லக்ஷ்மன் ஜெயக்கொடி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இக்குழுவில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், அமைச்சர்கள் பட்டி வீரக்கோன், போராசிரியர் ஜி. எல். பீரிஸ், எஸ். பி. திஸநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான டக்ளஸ் தேவானந்தா, எம். எஸ். ஜுனைதீன், ஆர். சம்பந்தன் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழு வழங்கும் பணிப்புரைகளை அனைத்து இராணுவப் பிரிவுத் தலைவர்களும், பொலீஸ் அதிகாரிகளும் ஏற்று நடத்தல் வேண்டும் எனவும் —

அதனை ஏற்று நடக்கத் தவறுபவர்கள் மீது விசாரணைகள் நடத்தி உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் — ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

முறைதவறி நடப்பவர்கள் பற்றி அறிவிப்பதற்கு வசதியாகத் தொலைபேசி மற்றும் பக்ஸ் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். (இ-9-7)

## டிரக் - சைக்கிள் விபத்தில் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 12

உரும்பராயில் இராணுவ டிரக் - சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவர் மரணமடைந்தார்,

நேற்று இச் சம்பவம் இடம் பெற்றது.

இந்த விபத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ந. சுப்பிரமணியம் (வயது61) என்பவரே படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார், நேற்று மாலை அவர் மரணமடைந்தார். (இ-15-9-139)

## வடமத்திய...

(முதலாம் பக்கத் தொடர்)
அங்கீகரிக்கப்பட் ஒன்பது அரசியல் கட்சிகளும், ஒரு சுயேட்சைக் குழுவும் தேர்தலில் போட்டியிடுகின்றன. ஒரு வேட்பாளர் நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## மிருசுவில்...

(முதலாம் பக்கத் தொடர்)
ரணத் துப்பாக்கிகள் — 63, கைக்குண்டுகள் — 10 ஆகிய ஆயுதங்களே கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9-7)

## வவுனியாவில் வாந்திபேதி

வவுனியா, ஜூலை

வவுனியா மாவட்டம் பூந்தோட்டம் பகுதியில் மற்றொரு வாந்திபேதி நோயாளி நேற்று இனம் காணப்பட்டார்.

இதுவரை வவுனியாவில் 5 வாந்திபேதி நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர் எனவும்—

பூந்தோட்டம், அண்ணா நகரப் பகுதிகளிலேயே அதிகளவு நோயாளர்கள் இனம் காணப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## 95க்குப் பின்...

(முதலாம் பக்கத் தொடர்)
அண்மையில் நீங்கள் நியமித்த ஆணைக்குழுவும் இதனையே செய்ய உள்ளது.

ஆனால் 95 ஆம் ஆண்டுக்குப் பின்னர் யாழ். குடா நாட்டில் 600 பேர் வரையில் காணாமல் போயுள்ளனர். கிழக்கு மாகாணத்தில் 100 பேர்வரையில் காணாமற் போயுள்ளனர். இவர்கள் தொடர்பான விசாரணைகளும் ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றினால் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசி மாகும்.

கிருஷாந்தி குமாரசா யின் கொலை வழக்கி குற்றவாளியாகக் கா பட்ட ஒருவர், 400 பே புதைகுழிகளை யாழ். கு நாட்டில் அடையாள காட்ட முடியும் எனக் கூ யுள்ளார்.

எனவே இவற்றை எல்லா கருத்தில் கொண்டு 95 ஆ ஆண்டுக்கு பின்னர் காண மற்போனோர் தொடர்பாக வும் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தற்பொழுது நீங்கள் நியமித்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழுவுக்கு உத்தரவு பிறப்பித்தல் வேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9-21)


### மருதம்கொம்மினிக்கேசன்

நெ. ம. ம. வி. வீதி, நெல்லியடி, கரவெட்டி.

எம்மிடம்

**உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி**

வசதிகள் செய்து கொடுக்கப்படுவதுடன் செய்திப் பரிமாற்றம் வடமராட்சிப் பிரதேச எல்லைக்குள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

மேலும் குறைந்த சலாரில் போட்டோ பிரதி சேவை, லெமினெற்றிங் செய்து கொடுக்கப்படும்.

மொத்தமாகப் பிரதி செய்வோருக்கு விசேட கழிவு உண்டு.

(57508)


## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)
ரமீஸ், எப். பதீன் ஆகியோர் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம், செயலாளர் இரா. சம்பந்தன், யாழ். மேயர் பி. சிவபாலன் ஆகியோரைச் சந்தித்து இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து விவாதித்தனர்.

வடக்கு வாழ் முஸ்லிம்கள் பிரச்சினைகளை தமிழர் விடுதலைக் கூட்டணி கையாள்வதையே தாம் விரும்புவதாக இந்தஅமைப்பினர் சந்திப்பின்போது தெரிவித்தனர் என்று கூறப்பட்டது. [இ-1]


ஜூலை 1998

### இன்னிசை நற்செய்திப் பெருவிழா

**மீண்டும் உங்களுடன்**

**தந்தை பெர்க்மான்ஸ்**

இயேசுகிறிஸ்துவினால் உங்களுக்கு
சமாதானமும் விடுதலையும் கொண்டுவரும்

### “ஆறுதலின் தொனி”

ஆறுதலளிக்கும் தேவ கானங்கள்; விசேட ஜெபங்கள்

| இடம் | காலம் | நேரம் |
|---|---|---|
| ★ துரையப்பா விளையாட்டரங்கு யாழ்ப்பாணம் | 15 - 17 | பி. ப. 3. 30 |
| ★ செங்குந்தா இந்துக்கல்லூரி மைதானம், கல்வியங்காடு/ நல்லூர். | 18 – 19 | பி.ப. 3.30 |

உங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்!

பிரவேசம் இலவசம்.

(சி/4206)



உ
சாவகச்சேரி
அருள்மிகு

### ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

### மஹோற்சவ விழா

அன்புடையீர்!

| | | |
|---|---|---|
| கொடியேற்றம்: | 14-07-98 | செவ்வாய்க்கிழமை |
| சித்திரத்தேர்; | 22-07-98 | புதன்கிழமை |
| தீர்த்தத்திருவிழா: | 23-07-98 | வியாழக்கிழமை |
| சுமங்கலி பூசை: | 27-07-98 | திங்கட்கிழமை |

அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!

ப. மகாகணபதி சர்மா,
ஆலய தர்மகர்த்தா.

விளம்பர அன்பளிப்பு:

**சாரங்கா நகை மாடம்**
177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**அருள்முருகன் நகையகம்**
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிவா நகை மாடம்**
கண்டி வீதி, (கிளையகம்) சாவகச்சேரி.

(சி/4258)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12 -07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org